## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

| | |
|---|---|
| 01.06.2017 | தூய ஆவியின் பெருவிழா - மூன்று நாள் தயாரிப்பு - செபவழிபாடு |
| 04.06.2017 | தூய ஆவியார் பெருவிழா - திருப்பலி |
| 05.06.2017 | புனித போனிபாஸ் - திருப்பலி |
| 06.06.2017 | தூய நார்பெர்ட் ஆயர் - திருப்பலி |
| 11.06.2017 | மூவொரு இறைவன் பெருவிழா - திருப்பலி |
| 13.06.2017 | பதுவை நகர் புனித அந்தோணியார் - திருப்பலி |
| 18.06.2017 | கிறிஸ்துவின் திருவுடல் திரு இரத்தம் பெருவிழா - திருப்பலி |
| 21.06.2017 | புனித அலோசியஸ் கொன்சாகா - திருப்பலி |
| 23.06.2017 | இயேசுவின் திரு இருதயம் - திருப்பலி |
| 24.06.2017 | திருமுழுக்கு யோவானின் பிறப்பு விழா - திருப்பலி |
| 25.06.2017 | ஆண்டின் பொதுக்காலம் 12ம் ஞாயிறு - திருப்பலி |
| 27.06.2017 | அலெக்சாந்திரியா நகர் புனித சிரில் - திருப்பலி |
| 29.06.2017 | புனிதர்கள் பேதுரு - பவுல் பெருவிழா - திருப்பலி |
| | பள்ளி தொடக்க நாள் செபவழிபாடு |

## பகுதி 2: விசுவாசத்தில் வளர...

1. தூய ஆவியாரும் இன்றைய கிறிஸ்தவ வாழ்வும்
2. புனித அந்தோணியார் புகழும் புதுமைகளும்
3. இயேசுவின் திருஇருதயம் - வெளிப்பாட்டின் வரலாறு
4. திருச்சபை செய்திகள்

# பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

## தூய ஆவியின் பெருவிழா - மூன்று நாள் தயாரிப்பு

### தூய ஆவியின் கொடைகளுக்காக செபம்

அருட்பணி. அந்தோணி கிறிஸ்டி சச.,

**முத்திருநாள் வழிமுறை**

1. குறிப்பிட்ட நாளுக்கான செபம்
2. பரலோகத்தில் இருக்கிற...
3. அருள் நிறைந்த...
4. தந்தைக்கும், மகனுக்கும், தூய ஆவிக்கும் மகிமை உண்டாவதாக... (மூன்று முறை)
5. அர்ப்பண செபம்
6. ஆவியின் கொடைகளுக்காக செபம்

**அர்ப்பண செபம்**

தூய ஆவியே உம்மை ஆராதித்து வணங்குகின்றேன். உம் தூய்மை, நீதி, அன்பு என்னும் சுடர்விடும் நலன்களுக்காக உம்மை போற்றுகின்றேன். என் ஆன்மாவின் ஆற்றலும் ஒளியும் நீரே, உம்மிலே நான் இயங்குகிறேன் உம்மிலே நான் உயிர் வாழ்கிறேன். உம்மை மனம் நோகச் செய்யும் எந்தவொரு செயலையும் செய்வதில்லை என உறுதிக்கொள்கிறேன். என் ஆன்மா என் இதயம் முழுதும் உமக்காகவே வாழ முடிவெடுக்கிறேன், உமக்கெதிராக எவ்வித சிறு பாவமும் என்னை நெருங்காமல் காத்துக்கொள்ளும். என் சிந்தனை ஒவ்வொன்றையும் காத்தருளும். உமக்காகவும் உம் ஒளிக்காகவும் என்றும் காத்திருக்க எனக்கு உதவியருளும். உமது தூண்டுதலோடு எதையும் எதிர்க்கொள்ளும் வரத்தையும் என் பலவீனங்களில் உம்மைப் பற்றிக்கொள்ளும் மனதையும் எனக்கு தந்தருளும். தந்தையோடும் மகனோடும் ஒன்றித்து வாழும் உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

**தூய ஆவியின் கொடைக்காக செபம்**

**முதல்:** உயிர்த்து விண்ணேற்றம் அடைவதற்கு முன் உமதாவியை அனுப்புவதாய் வாக்களித்த கிறிஸ்துவே எம் இறைவா, உம் மீட்பின் முழுமையான பலன்களை நாம் உணரும் படியாய் உமது ஆவியால் எம்மை நிரப்பியருளும்.

**முதல்:** ஞானத்தின் ஆவியைத் தாரும்

**அனை:** நிலையற்றவைகளிலிருந்து நிலையானவற்றை ஆய்ந்தறிய செய்தருளும்.

**முதல்:** நல்லறிவின் ஆவியை எமக்குத் தந்தருளும்.

**அனை:** உம் உண்மையின் ஒளியை நான் பெறச் செய்யும்.

**முதல்:** வழிகாட்டுதலின் ஆவியை எமக்குத் தந்தருளும்.

**அனை:** என்றும் இறை உமக்கு ஏற்ற வழியை தேர்ந்திடச் செய்யும்.

**முதல்:** திடமளிக்கும் ஆவியை எமக்குத் தந்தருளும்.

**அனை:** உம்மோடு இணைந்து எம் அன்றாடச் சிலுவைகளை உவப்புடன் சுமக்கச் செய்யும்.

**முதல்:** நுன்னறிவின் ஆவியை எமக்குத் தந்தருளும்.

**அனை:** இறைத்தந்தையையும் உம்மையும் அறியவும் எம்மையே நாங்கள் அறிந்து வாழவும் செய்தருளும்.

**முதல்:** இறைப்பற்றின் ஆவியை எமக்குத் தந்தருளும்.

**அனை:** இறையன்பிலே மகிழ்ந்திடச் செய்தருளும்.

**முதல்:** இறையச்சத்தின் ஆவியை எமக்குத் தந்தருளும்.

**அனை:** இறை சித்தத்திற்கு எதிராய் செல்லும் எதையும் எதிர்த்துப் போராடச் செய்யும்.

**முதல்:** உம் ஆவியினால் முத்திரையிடப்பட்டு என்றும் இறைத்தந்தையின் ஏற்புடையப் பிள்ளைகளாய் வாழும் வரம் தாரும்.

**அனை:** ஆமென்.

## 01.06.2017: முதல் நாளுக்கான செபம்

எல்லாம் வல்ல இறைவா, நீரினாலும் ஆவியினாலும் புதுப்பிறப்படைய செய்பவரே, எங்கள் பாவங்களையெல்லாம் இரக்கத்தோடு மன்னிப்பவரே, இறையேசுவைப்போல நாங்களும் ஆவியின் வரங்களாம் ஞானம், புத்தி, விமரிசை, அறிவு, திடம், பக்தி, தெய்வபயம் ஆகியவற்றை பெற்று முழுமையாய் வாழும் வரம் தாரும். ஆமென்

**பரலோகத்தில் இருக்கிற... அருள் நிறைந்த...**
**தந்தைக்கும், மகனுக்கும், தூய ஆவிக்கும்...**

வாரும் தூய ஆவியே, என் உள்ளத்தை தூய்மை தரும் இறையச்சத்தால் நிரப்பியருளும். இதனால் தந்தையையும், மகனையும் உம்மையும் என் கண்முன் கொண்டு வாழவும் உம் தூய்மைக்கு ஏற்றதொரு வாழ்வு வாழவும் துணைச் செய்யும். ஆமென்.

**பரலோகத்தில் இருக்கிற... அருள் நிறைந்த...**
**தந்தைக்கும், மகனுக்கும், தூய ஆவிக்கும்...**

வாரும் தூய ஆவியே, பக்தியால் என் மனதை நிரப்பியருளும். கடவுள்மீது ஆழ்ந்த அன்பை ஊற்றெடுக்கச் செய்து இறையன்பில் முழுமைக்காணவும்,

இறைச்சித்தத்தை வாழ்வதில் மகிழ்ச்சிக் காணவும், அதே அன்போடு சகோதர சகோதரிகளை நேசிக்கவும் செய்தருளும். ஆமென்.

**பரலோகத்தில் இருக்கிற... அருள் நிறைந்த...**
**தந்தைக்கும், மகனுக்கும், தூய ஆவிக்கும்...**

## 02.06.2017: இரண்டாம் நாளுக்கான செபம்

வாரும் தூய ஆவியே, உம் பிரசன்னம் தரும் திடத்தால் என்னை நிரப்பியருளும். துன்பச்சூழல்கள் எதிர்த்து நிற்கும் போது தொடர்ந்து போராடும் வலிமைப் பெறவும் பலவீனமான நேரங்களில் துணிந்து நிற்கவும், சாத்தானின் சூழ்ச்சிகளை உம் வல்லமையால் எதிர்க்கொள்ளவும் வரம் தாரும். ஆமென்.

**பரலோகத்தில் இருக்கிற... அருள் நிறைந்த...**
**தந்தைக்கும், மகனுக்கும், தூய ஆவிக்கும்...**

வாரும் தூய ஆவியே, என் அறிவை கூர்மைப்படுத்தும். இறைத்தந்தையின் சித்தத்தை ஆய்ந்து அறியவும், உலகத்தின் போக்கின்படி வாழ்வதிலுள்ள வெறுமையை புரிந்துக்கொள்ளவும், என் திறமைகள் என் வளங்கள் அனைத்தும் உம் கொடைகள் என்பதை உணர்ந்து உம்மை என்றும் புகழ்ந்தேத்தும் வரமருளும். ஆமென்.

**பரலோகத்தில் இருக்கிற... அருள் நிறைந்த...**
**தந்தைக்கும், மகனுக்கும், தூய ஆவிக்கும்...**

வாரும் தூய ஆவியே, புரிதலின் வரத்தால் என்னை நிரப்பியருளும். மேன்மைமிகு மறையுண்மைகளை புரிந்துக்கொள்ளவும், மீட்புக்கு தேவையான உண்மைகளை மனதார ஏற்றுக்கொள்ளவும், இதன்வழியாய் உம் பேரொளியைக் கண்டு மகிழும் முடிவில்லா வாழ்விற்கு தகுதி பெறவும் வரம்தாரும். ஆமென்.

**பரலோகத்தில் இருக்கிற... அருள் நிறைந்த...**
**தந்தைக்கும், மகனுக்கும், தூய ஆவிக்கும்...**

## 03.06.2017 மூன்றாம் நாளுக்கான செபம்

வாரும் தூய ஆவியே, நல்வழி அறியும் உமது வரத்தால் என்னை நிரப்பியருளும். உம் வழிநடத்துதலுக்கு பணிந்து நடக்கவும், என் கடமையுணர்ந்து செயல்படவும், என்னை இடறச்செய்யும் வழிகளை தவிர்த்து வாழவும் நான் உமது கட்டளைகளுக்கு என்றும் கட்டுப்பட்டு நடக்கவும் வரம் தாரும். ஆமென்.

**பரலோகத்தில் இருக்கிற... அருள் நிறைந்த...**
**தந்தைக்கும், மகனுக்கும், தூய ஆவிக்கும்...**

வாரும் தூய ஆவியே, உம் ஞானத்தால் என்னை நிரப்பியருளும். இறையுண்மைகளை உணரவும் மறையுண்மைகளை புரிந்துக்கொள்ளவும் இறையுணர்வால் அன்றாடம் வாழவும், இவற்றை நிலையில்லா பலவற்றை காட்டிலும் மேலாக மதித்து வாழவும் வரம் தாரும். ஆமென்.

**பரலோகத்தில் இருக்கிற... அருள் நிறைந்த...**
**தந்தைக்கும், மகனுக்கும், தூய ஆவிக்கும்...**

வாரும் தூய ஆவியே, உம் திரு கொடைகளால் என்னை நிரப்பியருளும். இந்த நவநாள் முழுவதும் நான் உம்மிடம் கேட்ட கொடைகளாலும் உமது கனிகளாலும், உமது தனிவரங்களாலும் என்னை நிரப்பி தந்தைக்கும் கிறிஸ்துவுக்கும் உமக்கும் புகழ் சேர்க்கும் வகையில் நம்பிக்கையின் வல்லமையோடு வாழ துணைப்புரியும். ஆமென்.

**பரலோகத்தில் இருக்கிற... அருள் நிறைந்த...**
**தந்தைக்கும், மகனுக்கும், தூய ஆவிக்கும்...**

## 04.06.2017 தூய ஆவியார் பெருவிழா திருப்பலி

திருமதி. ராணி வில்சன்

**முன்னுரை**

**கண் போன போக்கிலே கால் போகலாமா**
**கால் போன போக்கிலே மனம் போகலாமா**
**மனம் போன போக்கிலே மனிதன் போகலாமா**
**மனிதன் போன பாதையை மறந்து போகலாமா**

பல நேரங்களில் நாம் நம் மனசாட்சி சொல்கிறபடி வாழ்வதில்லை சில நேரங்களில் மட்டுமே அதற்கு பயந்து வாழ்கிறோம் இப்படி நம் வாழ்க்கையில் எப்பொதும் நாம் நினைத்த படியே வாழ்ந்து வருகிறோம். ஆனால் இறைஇயேசு ஒரு மனிதனாக உருவெடுத்து வந்தாரே தவிர அவரில் இருந்து செயல்பட்டது தந்தையாம் கடவுளால் துவக்கத்தில் உருவான தூய ஆவியார்.

பழைய ஏற்பாட்டில் கடவுள் மோசே வழியாக கட்டளைகளை கொடுத்ததை நினைவு கூறும் விதமாய் கொண்டாடப்பட்ட விழா. ஆனால் புதிய ஏற்பாட்டிலோ தூய ஆவியார் இறை இயேசு உயிர்த்த 50ஆம் நாள் அவரது திருத்தூதர்களை ஆட்கொண்ட நிகழ்வை நினைவு கூறும் பெருவிழா. தூய ஆவியை பெற்றவுடனேயே அவர்களிடம் எத்தனை மாற்றம்? பயந்து மூடப்பட்ட வீட்டிற்குள் மறைந்து இருந்தவர்கள் தூய ஆவியை பெற்றவுடன் இறைஇயேசுவின் புரட்சி வீரர்களாக தாங்கள் தங்கியிருந்த அறையை விட்டு வெளியே வந்து இயேசுவைப் பற்றிய நற்செய்தியை உலகெங்கும் பறைசாற்றி மறைசாட்சிகளாகவும், இரத்த சாட்சிகளாகவும் புனிதரகளாக இன்றும் நம் மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

நாமும் திருமுழுக்கு, உறுதிபூசுதல் எனும் அருளடையாளங்கள் வழியாக அதே தூய ஆவியை பெற்றிருக்கின்றோம். துவக்கமும் முடிவுமாக இறைஇயேசுவை இயக்கிய அதே தூய ஆவியானவர் நம்மை இயக்குகிறாரா? தூய ஆவியானவரை பெற்றவுடன் திருத்தூதர்களிடம் உருவான நற்செய்தியின் தாக்கம் நம்மிடம் உள்ளதா? தூய ஆவியார் தான் நம்மை இயக்குகிறார் என்பதை உணர்ந்திருக்கிறோமா? இக்கேள்விகளை நம்முள் எழுப்பி ஆய்வு செய்து என்றும் தூய ஆவியார் நம்மை இயக்கி அவர் அழைத்துச் செல்லும் பாதையில் சென்று நற்செய்தியை பரப்பி சான்றுபகர்வோம் என்ற உறுதியை நம்பிக்கையை பெற இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## விசுவாசிகளின் மன்றாட்டு

1. தாயும் தந்தையுமான இறைவா, எங்கள் தாய் திருச்சபையின் தலைமைபீடத்தில் வீற்றிருக்கும் எங்கள் திருத்தந்தைக்காக மன்றாடுகிறோம். இவரை நீர் எங்களுக்கு அளித்தது நாங்கள் பெற்ற பெரும்பாக்கியம். இன்னும் அதிகமாக தூ ய ஆவியாரின் வல்லமையை முழுமையாக பொழிந்து உலக நாடுகளின் அமைதிக்காக அவர் செயலாற்ற அவரை பாதுகாக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.
2. இயக்கும் அளிக்கும் தூய ஆவியே எங்கள் திருஅவையில் உள்ள அனைத்து அருட்பணியாளர்களையும் உம் பாதம் சமர்ப்பித்து மன்றாடுகின்றோம். திருஅவையில் உள்ள மக்களை ஆன்மீக வழியில் வல்லமையாக நடத்திச் செல்ல உமது தூயஆவியானவரின் துணையை பொழிந்து வழிநடத்தி ஆசீர்வதிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்
3. இயங்க வைக்கும் தூய ஆவியே துவக்க திருஅவையில் திருத்தூ தர்களோடு பலர் தங்கள் ஆண் பெண் என பேதம் இல்லாமல் உழைத்து சான்று பகர்ந்து வாழ்ந்தனர். அதே போல திருமுழுக்கு உறுதிபூசுதல் வழியாக புதுபிறப்பு அடைந்துள்ள நாங்கள், எங்கள் இல்லம் சமூகம் நாடு உலகம் அனைத்தையும் புதுபிக்க வேண்டிய அருளை அன்பை ஆசீரை அளிக்க வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

## 05.06.2017 புனித போனிபாஸ் திருப்பலி

திரு. ஜான் அலெக்ஸ்

"இயேசுவின் வழியில் நமது வாழ்வு"

**முன்னுரை**

அன்புக்குரியவர்களே, இன்று நாம் புனித போனிப்பாஸ் அவர்களின் திருவிழாவை நினைவு கூறும் இந்நேரத்தில் அவர் தனது 7 வயதில் துறவு மேற்கொண்டு 30வது வயதில் குருவாக அருட்பொழிவு பெற்று 716ல் மறைபரப்பு பணியில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர்.

722ல் திருத்தந்தை 2ம் கிரகோரி அவர்களால் ஆயராக அருட்பொழிவு பெற்று ஜெர்மனி முழுதும் மறைப்பணி செய்யும் பொறுப்பையும் அனுமதியும் பெற்றார். பல ஆன்மாக்களை மீட்டுவந்த இப்புனிதர் 738ல் திருத்தந்தையின் ஆஸ்திரேலிய நாட்டு பிரதிநியானார். குறிப்பாக இவரது காலத்தில் 742 ஏப்ரல் 21ம் நாள் ஆயர் திருச்சங்கம் கூட்டப்பட்டு பல மாற்றங்களை திருச்சபை அங்கீகரித்தது. அதில் ஒன்று ஆண்டிற்கு ஒருமுறை பெரிய வியாழன் அன்று குரு ஆயரின் கரங்களிலிருந்து புனித எண்ணெய் பெற்றுச் செல்லவதாகும்.

753ல் சுயீடர்சீ என்ற குலத்தில் கிழக்கு கடற்கரைப் பகுதியினைத் தம் மறைத்தளமாக நிர்ணயித்து போதித்தார். பலர் கிறிஸ்தவத்தை தழுவியதால் அங்கிருந்த உள்ளூர் மதவாதிகள் தங்கள் மதம் அழிந்துவிடுமோ என்று அஞ்சி 754 ஜுன் 5ம் நாள், திருமுழுக்கு மற்றும் உறுதி பூசுதல் வழங்க தயாராக இருந்த இப்புனிதரின் இல்லத்திற்கு சென்ற மதவாதிகள் அவரின் தலையை வெட்டினார்கள். அவரோடு 52 பேரை மறைசாட்சியாக்கினார்கள். இப்புனிதரை நினைவு கூறும் இந்நேரத்தில் அருட்பணியாளர்களுக்கு உதவிக்கரம் நீட்டும் குடும்பங்களில் இறையழைத்தல் எப்போதும் தழைத்தோங்கும் என்பதை மனதில்கொண்டு தொடர்ந்து இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. தூய்மையின் திருஉருவே இயேசுவே, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் துறவிகளுக்காக மன்றாடுகிறோம். உள்ளமும் செயலும் நன்மையைக் கனியாக ஈந்தால்தான் முழுமையாக மனிதம் மலர்கிறது என்பதை அவர்களின் வாழ்வின்மூலம் நாங்கள் அறிந்து மனிதம் மலரும் இடத்தில் புனிதம் மணம்வீசும் என்பதற்கினங்க எங்கள் வாழ்வை அமைத்துக்கொள்ள வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. இயேசு தன்னை கடவுளின் பணியாளராக அல்லாமல் கடவுளின் மகனாக வெளிப்படுத்தினார் என்பதை எங்கள் வாழ்வில் உணர்ந்தவர்களாக வாழ வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்

3. நிறைவின் உருவே இயேசுவே அன்று பாலை நிலத்தில் உம் வார்த்தைகளை கேட்டுக்கொண்டிருந்த மக்களுக்கு நீர் வேண்டிய மட்டும் உணவளித்தீரே எமது வாழ்விலும் எங்கள் துன்பவேளையில் நாம் வேண்டும் ஆசீர்வாதத்தையும் பலத்தையும் நிறைவாய் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்

4. இறைவா அமைதி தேடி ஏங்குகின்ற மக்களின் வாழ்வில் இன்னும் கோலோச்சுகின்ற அடிமைத்தனங்கள் மறைந்து சமத்துவமும், அன்பும், சுதந்திர அனுபவமும் விடிந்திட அதற்காக நாங்கள் உழைத்திட அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## 06.06.2017 தூய நார்பெர்ட் ஆயர் திருப்பலி

திருமதி. டிலைலா சேவியர்

### முன்னுரை

இன்றைய நாளில் நாம் நினைவு கூறும் புனிதரான நார்பெர்ட் அரச குடும்பத்தில் பிறந்தவர். ஆழமான அறிவுத் திறமையுடையவர். ஆழ்ந்த தெய்வ பக்தியின் காரணமாக இளமையிலேயே குருத்துவத்தை இவர் விரும்பினார். ஆனால் இளைஞரானதும் அரண்மனையில் உயர்ந்த குலத்தவரோடு சேர்ந்து உலக இன்பங்களை நாடியதால் குருவாகும் ஆசை குலைந்து விட்டது. ஒருமுறை இவர் குதிரையின் மீதேறி வேறு இடத்திற்கு செல்லுகையில் எதிர்பாராமல் புயல்காற்று அடித்து இடிமின்னல் ஏற்பட்டது இவருக்கு முன் இடிவிழவே குதிரை மிரண்டதால் கீழே தள்ளப்பட்டார். உடனே ”ஆண்டவரே நான் என்ன செய்ய வேண்டுமென விரும்புகிறீர்? என்று அலறினார். ”தீமையை விளக்கி நன்மை செய்யப் புறப்படு அமைதியைத் தேடி கண்டுபிடி” என்ற குரல் கேட்டது. அதன் பின் புனித பவுலைப் போல இவரும் மனம் திரும்பினார்.

தன்னுடைய வாழ்நாளை இறைபணியில் செலவழிக்க உறுதி பூண்டார். இறையியல் கற்றுக் குருப்பட்டம் பெற்றார். தமக்குரிய சொத்துக்களை ஏழைகளுக்கு பகிர்ந்து கொடுத்துவிட்டு கடுந்தவம் புரிந்து தினமும் ஒருவேளை மட்டும் உணவருந்தி தூய வாழ்வு வாழ்ந்தார். இறை ஏவுதலின்படி துறவற சபையை நிறுவினார் மிகவும் எளிமையான வாழ்வை மேற்கொண்டார். இவர்களின் சபை நற்கருணை நாதருக்கே முக்கியத்துவம் தந்தது. இப்புனிதரே இந்த நற்கருணை பக்தியை சிறப்பான முறையில் கற்றுத் தந்து தாமும் இறுதிவரை கடைபிடித்தார். இவர் 500க்கும் மேற்பட்ட துறவற இல்லங்களை உருவாக்கினார். பெண்களுக்கும் ஒரு சபையை இவர் ஏற்படுத்தியது குறிப்பிடத்தக்கது. தனது 53ஆம் வயதில் இறைவனடி சேர்ந்தார். நற்கருணை ஆண்டவர்மீது ஆழ்ந்த நம்பிக்கையும் விசுவாசமும் கொள்ள இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

### விசுவாசிகளின் மன்றாட்டு

1. இறைவா திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை ஆயர்கள் குருக்கள் துறவறத்தார் அனைவருக்கும் நல்ல உடல் உள்ள நலம் தரவும் இவர்களுக்கு ஏற்படும் துன்பங்கள், எதிர்ப்புகள், பிரச்சனைகள் இவைகளிலிருந்து அமைதியும் தங்களின் துறவற வாழ்வில் இறுதிவரை நிலைத்திருக்கும் வரத்தையும் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. நற்கருணை நாதரே இறைவா இன்றைய திருநாளை சிறப்பிக்கும் இப்புனிதரைப் போல நாங்களும் இறைவனின் சித்தத்திற்கு ஏற்ப வாழவும், நற்கருணை ஆண்டவரிடம் நம்பிக்கையும் பக்தியம் விசுவாசமும் கொண்டு நன்றியோடு ஆராதனை செலுத்தும் வரத்தை தரவேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

3. எங்களை வழிநடத்தும் இறைவா இளம்பெண்கள் இளைஞர்கள் சிறுவர், சிறுமியர் அனைவரையும் உமது கரத்தில் ஒப்புக்கொடுக்கின்றோம். இவர்களுக்கு நல்ல உடல் நலமும் கல்வி அறிவும் தந்தருளும். இவர்களின் எதிர்காலம் உமது சித்தப்படி நடக்கவும் உம்மையே சார்ந்து வாழ்ந்து உம்மில் மன அமைதியும், மகிழ்ச்சியும், நிறைவான தூய்மையான வாழ்வும் தந்தருளும்படி உம்மை மன்றாடுகின்றோம்.

## 11.06.2017 மூவொரு இறைவன் பெருவிழா திருப்பலி

திருமதி. ராணி சம்பந்தன்

### முன்னுரை

தந்தை மகன் தூய ஆவியின் பெயராலே ஆமென். உலகெங்கும் வாழும் ஒவ்வொரு கத்தோலிக்க குடிமகனின் உள்ளத்திலே ஒலிக்கும் தாரகமந்திரம் தந்தை, மகன், தூய ஆவி. ஒரே கடவுள் மூன்று ஆளாக தமத்திருத்துவமாக இருக்கிறார் என்பது விசுவாச உண்மை. மோசே ஆண்டவரை சீனாய் மலையில் சந்திக்க சென்றபோது தந்தையாம் கடவுள் தன்னை ஆண்டவர் என்று அறிவித்ததும், தூய பவுல் தன் மடல்களில் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் அருளும் கடவுளின் அன்பும் தூ ய ஆவியின் நட்புறவும் உங்கள் அனைவர் மேலும் இருப்பதாக என்று பெந்தகோஸ்தே விழாவின் போது தூய ஆவி தங்களை ஆட்கொண்டதை சீடர்கள் உணர்ந்ததும் நமது நம்பிக்கையின் ஊற்றுக்கல் ஆகும். மூவொரு கடவுளின் அன்பு அது நம் இல்லத்திலிருந்தே துவங்குகிறது. மூவொரு கடவுளின் ஒன்றித்த செயல்பாடே நாம் வாழும் நம் குடும்பம் என்னும் படைப்பு உடனிருத்தல், ஊக்குவித்தல், இணைந்து திட்டமிடல் பலவீனத்தை ஏற்றல் விட்டுக்கொடுத்து வாழ்தல் மன்னித்தல் மானம் காத்தல் யாவும் ஒரு அன்பு நிறை குடும்பத்தின் தன்மைகள். இவையணைத்தும் ஒரு குடும்பத்தில. உள்ளபோது மூவொரு இறைவனே அங்கு ஆட்சி புரிகிறார் என்பதில் ஐயமில்லை. அப்படிப்பட்ட ஒரு தெய்வீக குடும்பமாக வாழ முடிவெடுத்து இத்திருப்பலியில் இணைவோம்.

### விசுவாசிகளின் மன்றாட்டு

1. அன்பு தந்தையே இறைவா, உமது கருவியாம் திருத்தந்தையின் கருத்துகளுக்கு மதிப்பளித்து ஆயர்கள், குருக்கள், பொது நிலையினர் அனைவரும் அவரை பின்பற்றி தமது கடமைகளை செயலாற்ற வேண்டிய வரமருள உம்மை மன்றாடுகின்றோம்.

2. வாழ்வளிக்கும் வள்ளலே இறைவா, இயற்கையின் சீற்றத்தால் சுட்டெரிக்கும் சூரியனின் வெப்பம் தாங்க இயலாமல் தவிக்கும் இக்கால கட்டத்தில் நல்ல மழைபெய்து பூமியை குளிரச் செய்து வரண்டு கிடக்கும் வயல் வெளிகள் பசுமை பெற வேண்டும் என்றும் ஏங்கித் தவிக்கும் விவசாயிகளின் வாழ்வு தளிர்க்க வேண்டும் என்றும் உம்மை மன்றாடுகிறோம்.

3. நலமளிக்கும் இறைவா வளர்ந்து வரும் நாகரீக உலகின் போக்குகளினால் சீரழிந்து கொண்டிருக்கும் எங்கள் இளம்

சமுதாயத்தினர் உம் அருள் பெற்று, பக்குவம் பெற்று வாழ்வின் ஆதாரம் எங்குள்ளது என்பதை உணர்ந்து நல்வாழ்வு பெற்று நலமுடன் வாழ உம்மை மன்றாடுகின்றோம்.

4. காக்கும் தெய்வமே இறைவா தேச நலனை மனதில் கொண்டு அரசியலில் நல்ல மாற்றத்தை கொண்டு வர வேண்டியும் நாட்டில் தலைவிரித்தாடும் பல பிரச்சினைகள் சுமூகமாக தீர்ந்து அமைதி நிலவ வேண்டியும், அரசியல் விழிப்புணர்வு பெற்று மக்கள் வாழவேண்டியும் உம்மை மன்றாடுகிறோம்.

## 13.06.2017 பதுவை நகர் புனித அந்தோணியார் திருப்பலி

திரு. ஜான் அலெக்ஸ்

### முன்னுரை

அன்புக்குரியவர்களே, கோடி அற்புதர், புதுமை வள்ளல், அற்புத போதகர், ஏழைகளின் நண்பன், மறைவல்லுநர், காலத்தின் அறிகுறிகளைத் தெரிந்து திருமறைக் காத்த இறைவாக்கினர், நற்செய்தியை சொல்லாலும் செயலாலும் அறிவித்த இறைத்தூதர் என புகழப்படும் பதுவை அநதோணியாரின் திருவிழாவை நினைவு கூறுகின்றோம். இப்புனிதரை தெரியாதவர்கள் யாருமில்லை எனலாம். ஆப்பிரிக்கா சென்று போதித்து மறைசாட்சியாக மரிக்க விரும்பி 1220ல் மொராக்கோவிற்கு சென்றார். நோயுற்றதால் மீண்டும் தாய்நாட்டிற்கு திரும்பும்போது கப்பல் திசைமாறி இத்தாலியில் கரை ஒதுங்க அங்கேயே தனது பணியை செய்துவந்தார். பல்வேறு புதுமைகளுக்கு சொந்தக்காரர். குழந்தை இயேசுவைக் கரங்களில் ஏந்தும் பாக்கியம் பெற்றவர்.

1228ல் இத்தாலியில் பதுவை நகருக்கு சென்றார். அது பல்கலைக்கழகம் இருந்த நகரம்தான். ஆனால் ஒழுக்கம் இல்லா நகராகவும் விளங்கிற்று. தமது போதனையால் மாற்றினார். பதுவை நகர ஏழைகளின் நாயகனாக வாழ்ந்தவர் 1231 ஜுன் 13ம் நாள் மறைந்தார். 1232ல் புனிதராகவும், 1263ல் இவரது அழியா நாக்கு எடுக்கப்பட்டது. ஆடம்பர செல்வந்தர்கள் அல்ல எளிய வாழ்வு வாழ்பவர்களே இறை ஆசீரை நிறைவாகப் பெறுகிறார்கள் என்பதற்கு இப்புனிதரின் வாழ்வு மூலம் உணர்ந்து வாழ இன்றைய திருவழிபாடு நம்மை அழைக்கின்றது. அந்த அழைப்பை ஏற்போம். தொடர்ந்து இத்திருப்பலியில் பங்கேற்போம்.

### விசுவாசிகளின் மன்றாட்டு

1. நம்பிக்கையின் திருஉருவே இயேசுவே, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் துறவிகள் நம்பிக்கையற்றோருக்கு நம்பிக்கையாகவும் சோர்வுற்றோருக்கு பலமாகவும், வழிதவறியோருக்கு நல்வழிகாட்டியாகவும் திகழ்ந்து உமக்காக வாழும் வரத்தை தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. இயேசுவே உமது வார்த்தையை உலகுக்கு எடுத்துரைக்க இறைவாக்கினரை ஏற்படுத்துகின்ற இறைவா, உம் வாக்கை அன்புடனும் தாழ்ச்சியுடனும் கேட்டுக் கீழ்படியும் மக்களாக நாங்கள் வாழ இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. மாட்சிமிகு இயேசுவே, பகிர்ந்து வாழும் தாராள உள்ளத்தை எங்களுக்கு தந்து உமது தூய ஆவியினால் எங்களை நிரப்பியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. அனைத்திலும் சிறந்தது அன்பே என்பதை அறியும் நாங்கள் உண்மையான அன்பின் மக்களாக வாழ வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 18.06.2017 கிறிஸ்துவின் திருவுடல் திரு இரத்தம் பெருவிழா திருப்பலி

திரு. ஜீசஸ் மகுட மன்னன்

**முன்னுரை**

இயேசுவின் இரத்தத்தின் ரத்தமான கத்தோலிக்க சகோதர சகோதரிகளே, இன்று நம் தாயாம் திருச்சபை கிறிஸ்துவின் திரு உடல் திரு இரத்தப் பெருவிழாவைக் கொண்டாடுகிறது. 1263ம் ஆண்டு இத்தாலியில் பொல்சேனா என்ற கிராமத்தில் ஒரு குருவானவர் கையில் வசீகரிக்கப்பட்ட கோதுமை அப்பத்திலிருந்து துணியில் வடிந்த கிறிஸ்துவின் திரு இரத்தம் பிரபலமான புதுமையாக மக்கள் கொண்டாடினர். இதனை ஆய்ந்தறிந்த திருத்தந்தை 4ம் ஹர்பன் உலகம் முழுவதும் கிறிஸ்துவின் திருவுடல் திரு இரத்தப் பெருவிழாவாகக் கொண்டாடக் கட்டளையிட்டார். நற்கருணை ஆராதனைப் பாடலாக "தந்தும் ஏர்கோ" பாடலை புனித தாமஸ் அக்குவினாஸ் எழுத உலகே பாடி ஆராதித்துக் கொண்டிருக்கிறது.

பெரிய வியாழன்று சீடர்களின் கால்களைக் கழுவியப்பின் அப்பத்தைபிட்டு இது உன் உடல் என்றும், திராட்சை இரசத்தை கிண்ணத்தில் எடுத்து இது என் இரத்தம் என்றும் கூறி நிரந்தர உடன்படிக்கையை ஏற்படுத்தினார் (மாற்கு 14: 22-25) எம்மாவுஸ் சீடர்களுடன் அப்பத்தை பிட்டு தேவ நற்கருணை விழாவைக் கொண்டாடினார் (லூக் 24: 13-35) உலகம் முடியும்வரை எந்நாளும் உங்களோடு இருக்கிறேன் (மத் 28:16-20) என்று வாக்களித்தது இன்றும் நம்மோடு இறைவன் வாழ்ந்து வருகிறார்.

புனிதர்கள் தாங்கள் வாழ்ந்த உன்னதமான வாழ்வுக்குக் காரணம் நற்கருணையே. ஊதாரணமாக புனித அன்னை தெரேசாவுக்குத் தினமும் சக்தி வழங்கியது கிறிஸ்துவின் திரு உடலும், திரு இரத்தமும்தான். கிறிஸ்துவின் திருவுடலையும் திரு இரத்தத்தையும் தாங்கிய நற்குருணையை நம் வாழ்வின் மையமாகக் கொண்டு நம்முடைய விசுவாசப் பயணத்தைத் தொடர்வோம் என வாக்களித்து இன்றைய திருப்பலியில் பக்தியுடன் பங்கெடுப்போம்.

## விசுவாசிகளின் மன்றாட்டு

1. மனுமகன் வரும்போது உலகில் விசுவாசத்தைக் காண்பாரோ? (லூக் 18:8) என்று எச்சரித்த இறைவா, உலகில் விசுவாசத் தளர்ச்சி மிகக் கண் கூடாக உள்ளது. தேவாலயங்கள் தப்பறைக் கொள்கைகளைக் கொண்ட வேறு மதங்களின் புகலிடமாக மாறிவிட்டது. திருப்பலிக்குச் செல்லும் மக்களைவிட பிறமத பிரிவினை சபை நற்செய்தி கூட்டங்களுக்குச் செல்லும் கூட்டம் அதிகரித்துவிட்டது. சாத்தானின் மாய வலைகளிலிருந்து எங்களை மீட்டு இரட்சிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. உண்மையின் ஊற்றே இறைவா, "நற்கருணையில் இயேசுவின் உண்மையான இறைபிரசன்னமில்லை" என்ற தப்பறைக் கொள்கைகளால் இன்றும் மக்கள் வழிதவறி சென்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குத் தடுமாற்றம் இல்லாத விசுவாசத்தைக் கொடுத்து கத்தோலிக்கத் திருச்சபையின் மக்களாக வாழும் வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
3. நற்கருணை என்று அருட்சாதனத்தால் அன்பின் நிறைவை எங்களுக்கு கற்றுத்தரும் இறைவா, இதே நற்கருணையால் ஊட்டம் பெறும் நாங்கள் நற்கருணையின் மக்களாய் அன்பிலும் தியாக உணர்விலும் உண்மையான மன்னிப்பிலும் உறவிலும் வளரும் வரம் தரவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 21.06.2017 புனித அலோசியஸ் கொன்சாகா திருப்பலி

திருமதி. ராணி சம்பந்தன்

### முன்னுரை

இன்றைய தினம் புனித கொன்சாகா ஞானப்பிரகாசியாரை நினைவு கூர்ந்து சிறப்பிப்போம். புனித கொன்சாகா ஞானப்பிரகாசியார் இத்தாலிய அரச குடும்பத்தை சேர்ந்தவர். தாயின் உதிரத்தில் இருக்கும் போதே ஞானஸ்நானம் பெற்றவர். ஒன்பதாவது வயதில் மாதாவின் பீடத்தின் முன் இன்று தனது கன்னிமையை கடவுளுக்கு அர்ப்பணித்தவர். 11வது வயதில் புதுநன்மை பெற்றார். இவரது பெற்றோருக்கு இவரது அன்மீக வளர்ச்சியில் விருப்பம் இல்லை. அவரை அரண்மனையின் சுகபோகங்களுக்கு அடிமையாக்க விரும்பினார்கள். ஆனாலும் இவர் அதற்கெல்லாம் இடங்கொடாமல் தனது உரிமை சொத்தையெல்லாம் தம்பி "ரொடல்போ"விற்கு விட்டுக்கொடுத்துவிட்டு இயேசு சபையில் சேர்ந்தார். சிறுவயது முதலே சிறுநீரக கோளாரில் அவதிப்பட்ட நமது புனிதர் அதை பொருட்படுத்தாமல் ப்ளேக் நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு சேவை புரிந்தார். தினம் ஒருமணி நேரமோ அல்லது சமயத்தில் 5மணி நேரமோ தியானம் செய்வார். அவரது தியானத்தில் கபிரியேல் தூதர் அவருடன் உரையாடிக்கொண்டிருப்பார். இவரது பிரதான நோக்கம் தேவசித்தத்திற்கும் பெரியவர்களுக்கும் கீழ்ப்படிந்து நடப்பதுமேயாகும்.

தனது 25வயதில் புனித ராபர்ட் பெல்லார்மின் அருகே இருக்க இயேசுவின் பெயரை சொல்லிக் கொண்டே உயிர்த்துறந்தார்.

இன்றைய வாசகங்களும் புனித ஞானப்பிரகாசியாரின் வாழ்வை பற்றியே அமைந்துள்ளன. கடவுள் புறங்களை பார்த்து ஆனந்தப்படுபவர் அல்ல. அர்ப்பண உணர்வோடும் ஆனந்த மனதோடும் சேவை புரிபவர் கடவுளின் அன்புக்குரியவர். அரச போகங்களை துறந்து இளம் வயதிலேயே ஞானம் பெற்று ஒளிவீசிய புனித ஞானப்பிரகாசியார் போன்று இறை சித்தத்திற்கு தம்மை அர்ப்பணித்து இத்திருப்பலியில் பங்கேற்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. அன்பு தந்தையே இறைவா, உமது வழித்தோன்றலான திருத்தந்தையின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து ஆயர்கள், குருக்கள், பொதுநிலையினர் அனைவரும் அவரை பின்பற்றி தமது கடமைகளை செயலாற்ற வேண்டிய வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

2. வாழ்வளிக்கும் வள்ளலே இறைவா, இயற்கையின் சீற்றத்தால் சுட்டெரிக்கும் சூரியனின் வெப்பக்கதிர் தாங்க இயலாமல் தவிக்கும் இக்கால கட்டத்தில் நல்லதொரு மழையினை பொழியச் செய்து பூமியையும் மக்களையும் குளிரச் செய்து வரண்டு கிடக்கும் வயல்வெளிகள் பசுமை பெற வேண்டுமென்று ஏங்கித்தவிக்கும் விவசாயிகளின் வாழ்வு தளிர்க்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. நலமளிக்கும் இறைவா, வளர்ந்து வரும் நாகரீக உலகின் அவசர போக்குகளினால் சீரழிந்து கொண்டிருக்கும் எங்கள் இளம் சமுதாயத்தினை உம் அருள்பெற்று, பக்குவம் பெற்று வாழ்வின் ஆதாரம் எங்குள்ளது என்பதை உணர்ந்து நல்வாழ்வு பெற்று நலமுடன் வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

4. காக்கும் தெய்வமே இறைவா, தேசநலனை மனதில் கொண்டு அரசியலில் நல்ல மாற்றத்தை கொண்டு வர வேண்டியும், நாட்டில் தலைவிரித்தாடும் பல பிரச்சனைகள் சுமுகமாக தீர்ந்து அமைதி நிலவ வேண்டியும், அரசியல் விழிப்புணர்வு பெற்று மக்கள் வாழவேண்டியும் உம்மை மன்றாடுகிறோம்.

## 23.06.2017 2017 இயேசுவின் திரு இருதயம் திருப்பலி

திரு. இம்மானுவேல் ஜெயராஜ்

**முன்னுரை**

புனித மத்தேயு நற்செய்தி 5: 3-10 மலைப்பொழிவு வசனங்களில் ஏழையரின் உள்ளத்தோர், துயருறுவோர், கனிவுடையோர், நீதியை நிலைநாட்டும் வேட்கை கொண்டோர், இரக்கமுடையோர், தூய்மையான உள்ளத்தோர்,

அமைதி ஏற்படுத்துவோர், நீதியின் பொருட்டு துன்புறுத்தப்படுவோர் என இயேசு சுட்டிக் காட்டும் அனைத்தும் அவரது இருதயத்திற்கு சம்மபந்தமுள்ளவைகளாக இருப்பதைக் காண்கின்றோம். மத்தேயு நற்செய்தி 22:37-39ல் தலைசிறந்த கட்டளையும் அதற்கு இணையான கட்டளையும் இதயத்தோடும் உள்ளத்தோடும் மனதோடும் பின்பற்றப்பட வேண்டும் என இயேசு வலியுறுத்துகிறார்.

இயேசுவின் திருஇருதய பக்தி 16-17ம் நூற்றாண்டுகளில் பரவ தொடங்கின. உரோமன், ஆங்கிலிக்கன், லூத்ரன் சபையினர் பெந்தகோஸ்கே, திருநாளுக்குப்பின் 19 நாட்கள் கழித்து இயேசுவின் திருஇருதய திருநாளைக் கொண்டாடினர். திருத்தந்தை கிரகோரி ஒன்பது வெள்ளிக்கிழமைகளில் திருஇருதய நவநாள் செபத்தை சொல்லும் வழக்கத்தை ஊக்கப்படுத்தினார். பிரான்ஸ் நாட்டின் கத்தோலிக்க அருட்சகோதரி மார்கரேட் மேரி அல்கோக் தான் கண்ட இயேசுவின் திருஇருதய உருவத்தை அனைவரும் காணும்படி செய்ய அயராது செபித்து அகிலமெங்கும் இயேசுவின் திருஇருதயப் பக்தியை பரவ செய்தார். இன்று இயேசுவின் திருஇருதய திருநாளை சிறப்பிக்கும் நாம் பக்தியுடன் இத்திருப்பலியில் பங்கேற்று இயேசுவின் திருஇருதயத்தை நோகச் செய்த நம் பாவங்களுக்கு மன்னிப்பு வேண்டி இறையருள் பெறுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. இன்றைய நவநாகரிக உலகில் துறவற வாழ்வில் துயரங்களை சந்திக்கும் இக்காலகட்டத்தில் நம் கத்தோலிக்க திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் இவர்களின் பணி சிரமங்களை இயேசுவின் திருஇருதயத்திற்கு ஒப்புக்கொடுத்து தூய எளிய விசுவாசம் நிறைந்த உள்ளத்தினர் முன்வந்து இப்பணியில் பங்கெடுக்க அருள்புரிய இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. குடும்பங்களில் உள்ள வறுமை, வேலையின்மை, விஷம்போல் விலைவாசி ஏறிக்கொண்டிருக்கும் நிலையில் குடும்பத்தை வழிநடத்த பெரும் சிரமங்களை சந்திக்கும் இவர்களை திருஇருதயத்திற்கு ஒப்புக்கொடுத்து குடும்பங்களில் ஒற்றுமை, சமாதானம், மனநிறைவு, மகிழ்ச்சி, பொருளாதார கஷ்டம் நீக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. தமிழகம் மற்றும் இந்திய நாடெங்கும் மழையின்றி விவசாயம் பாதிக்கப்பட்டு, குடிநீரின்றி வறட்சியில் வாடும் அனைத்து உயிரினங்களையும் இயேசுவின் திருஇருதயத்திற்கு ஒப்புக்கொடுத்து இந்திய தேசமெங்கும் நல்ல மழைபொழிய செய்து விவசாயம் செழிக்கவும், அனைத்து மக்களும் உயிரினங்களும் நல்வாழ்வு பெற வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. நாடுகளுக்கிடையே உள்ள பகைமை, ஒரு நாட்டை அழித்து தன் நாட்டை உயர்த்துவதும், ஒருவரை அழித்து மற்றவர் சுகமாக வாழ்வதுமான மனப்பான்மை மற்றும் போர்த்தளவாடங்களை குவிக்கும் இரத்த வெறி இவற்றால் உலகம் சந்திக்கப் போகும் மூன்றாம் உலகப்போர் அதனால் இழக்கப்படும் மனித உயிர்கள், அனாதைகளாக்கப்படும் மக்கள், மண்குவியலாக்கப்படும் மாட மாளிகைகள், பலநூறு வருடங்களுக்கு அச்சுறுத்தக் கூடிய நோய்கள் இவற்றை இயேசுவின் திருஇருதயத்திற்கு ஒப்புக் கொடுத்து உலகெங்கும் சகோதர சகோதரத்துவம் சமத்துவம் மற்றும் மனித நேயம் வளர இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 24.06.2017 திருமுழுக்கு யோவானின் பிறப்பு விழா திருப்பலி

திரு. DVR. ராஜா

### முன்னுரை

திருச்சபை இன்று ஸ்நாபக அருளப்பர் என்னும் திருமுழுக்கு யோவானின் பிறப்பு பெருவிழாவைக் கொண்டாடுகிறது. திருச்சபையின் வழிபாட்டிலே இன்றளவும் மூன்று பேர்களின் பிறந்த நாளை மட்டுமே திருச்சபை சிறப்பிக்கின்றது. யோவானின் பிறப்பே அதிசயம், ஆச்சரியம், சாட்சியம் கொண்டது. இவர் மனிதராய் அவதரித்தும் உணவு, உடை, உறைவிடம், வாழ்க்கை முறை ஆகியவற்றில் மாறுபட்டு வாழ்ந்து தூய ஆவியின் வழிநடத்தலில் வாழ்ந்தவர். வாழ்நாள் முழுவதும் வரப்போகும் மெசியாவை முன்னறிவித்தவர். திருமுழுக்கு யோவான் சக்கரியா எலிசபெத்தம்மாள் இவர்களின் புதல்வர் மக்களை மனம் திரும்பச் செய்து எச்சரித்து யோர்தான் ஆற்றில் திருமுழுக்கு கொடுத்தவர். பின் நாளில் தவற்றை சுட்டிக் காண்பித்ததால் ஏரோது அரசரால் சிறையில் அடைக்கப்பட்டு தலை வெட்டுண்டு, இறைசாட்சியாய் மரித்தார். மெசியாவின் மிதியடிவாரைக் கூட அவிழ்க்க எனக்கு தகுதியில்லை என்று தன்னை தாழ்த்திக் கொண்டவர். அவரை மண்ணுலகில் திருமுழுக்கு யோவானுக்கு நிகரான ஒருவர் பிறக்கவில்லை என்று இயேசு கிறிஸ்துவினால் சான்றளிக்கப்பட்ட ஒரே மாமனிதர் இவரே.

இவர் வாழ்ந்துக் காட்டிய மாதிரிகளைப் பின்பற்றி இறைவார்த்தையை வாழ்வாக்கி இறைவனில் இணைந்து இறையாசீர் பெறுவோம். ஆண்டவரின் மக்களாய் விளங்க இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

### விசுவாசிகளின் மன்றாட்டு

**1. திருச்சபைக்காக மன்றாடுவோம்:** அன்பின் ஆண்டவரே எமது திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தையை ஆசீர்வதித்து உமது வல்லமையை அளித்து உடல் உள்ள நலனை பாதுகாத்து இறைக்கரம் அவரோடிருந்து அவர் ஆற்றும் பணியில் இறை வல்லமை விளங்கிடவும்,

அவரோடு இணைந்து பணிசெய்கின்ற கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், கன்னியர் இறைப்பணியாளர் யாவரையும் இறைவன் ஆசீர்வதித்து இறைப்பிரசன்னத்தில் பணி செய்ய இவர்கள் குடும்பங்களையும், குடும்ப உறுப்பினர்களையும் இறைவன் ஆசீர்வதிக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. **பங்கு மக்களுக்காக மன்றாடுவோம்:** இரக்கத்தின் ஆண்டவரே, எமது பங்கு மக்கள் தொடர்ந்து இறை உணர்விலும் நம்பிக்கையிலும் வாழ்ந்து குடும்பத்தின் ஏற்றத்தாழ்வுகளை பொருளாதாரப் பிரச்சனைகளில் இறைவனின் துணையோடு வெற்றி காணவும் கல்விப் பாசறைகள் வியாபாரமாகியுள்ள இக்காலத்தில் தங்கள் பிள்ளைகளுக்கு நல்ல கல்விக் கொடுக்க முடியாத குடும்பங்களை இறைவன் பரிவன்போடு அவர்களின் ஏக்கங்களைத் தீர்க்கவும், கடன்கள் நீங்கி வருவாய்ப் பெறுகவும் இறைவன் அபரிமிதமாக ஆசீர்வாதங்களைப் பொழிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. **இளையோருக்காக மன்றாடுவோம்:** கருணையின் வடிவே இறைவா, இருபால் இளையோரும் கல்வியில் கவனம் செலுத்தி நல்ல எதிர்காலத்தை ஏற்படுத்திக்கொள்ளவும் நல்ல வேலை வாய்ப்பு பெறவும் பெற்றோர்களின் கவலைகளைக் களைந்து நல்ல ஆலோசனையைக் கேட்டு நடக்கவும், இறை நம்பிக்கையில் நிலைத்து திருச்சபையோடு ஒன்றித்து வாழவும், வாழ்க்கைத் துணையைத் தேடுவோர்க்கு நல்ல வாழ்க்கைத் துணையினை அமைத்துத் தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. **ஆட்சியாளர்களுக்காக மன்றாடுவோம்:** நீதியின் இறைவா, உலகில் பல நாடுகள் தங்கள் படை பலத்தை பறைசாற்ற மக்களையும், உயிர்களையும் பற்றிக் கவலைப்படாமல் அணு ஆயுதங்களை பயன்படுத்தி வல்லமையை பலத்தை கொண்டு பெருமைத்தேடும் போக்கு மறைந்து எல்லா உயிர்களுக்கும் மதிப்பளிக்கவும் வன்முறை விடுத்து அன்புறவில் நடந்திடவும், நாட்டிலும் மாநிலத்திலும் வியாபார எண்ணம் கொண்டு மக்களுக்கு விரோதமாக முரணான திட்டங்களை திணித்து வரும் ஆட்சியாளர்களை அகற்றி அமைதியிலும் ஒற்றுமையிலும் சமாதானத்திலும் அன்பு பகிர்விலும் திறம்பட செயல்படும் நல்லாட்சியமைய மக்கள் பதட்டமின்றி வாழ உரிமைகள் நிலைநாட்டிட தேவைகள் நிறைவேரிட உமது அருளைப்பொழிந்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்

## 25.06.2017 ஆண்டின் பொதுக்காலம் 12ம் ஞாயிறு திருப்பலி

திருமதி. பத்மாவதி

### முன்னுரை

ஒருவருடைய குற்றத்தினால் பலரும் இறந்தனர். ஆனால் இயேசு என்னும் ஒருவரால் இவ்வுலகமே சாவைவென்று மீட்பு பெற்றது என்பதினை பவுலடியார் உரோமையருக்கு எழுதிய திருமுகத்தில் தெளிவாக 2ம் வாசகம் கூறுகிறது.

தமது உயிரைக் கொடுத்து நம்மை மீட்ட நமதாண்டவர் இயேசுவுக்கு என்ன கைமாறு செய்யப்போகிறோம். அவர் கூறியபடி உலகெங்கும் நற்செய்தியை பரப்பவேண்டும். இயேசுவின் வாக்குக்கிணங்க உடலை கொல்பவர்களுக்கு அஞ்சவேண்டாம். மாறாக ஆன்மாவையும் உடலையும் நரகத்தில் அழிக்கக் கூடிய கடவுளுக்கே அஞ்சுங்கள் என்கிறார். மேலும் என்னை ஏற்றுக்கொள்பவர்களை விண்ணகத்திலிருக்கும் என் தந்தையின் முன்பாக நானும் ஏற்றுக்கொள்வேன் என்னை ஏற்க மறுப்பவர்களை நானும் என் தந்தையின் முன்னிலையில் மறுதலிப்பேன் என்கிறார் நம் ஆண்டவர். நாமும் இயேசுவின் திருவுளத்தை மனதில் கொண்டு அவர் வழி நடக்க இத்திருப்பலியில் முழுமையாக பங்கேற்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. எம் தந்தையே இறைவா, உம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள் அனைவரும் நல்ல வழிகாட்டியாகவும் பாதுகாப்பாளர்களாகவும் மேய்ப்பர்களாகவும் எம்மை வழிநடத்த அருள்புரியும்படி உம்மை மன்றாடுகிறோம்.

2. மன்னிக்கும் தந்தையே இறைவா, எமக்கு பல தொல்லைகளை கொடுத்தும் எங்கள் பெயர்களை கெடுத்தும் வாழ்க்கையை நரகமாக மாற்றுபவர்களையும் முழுமனதுடன் மன்னிக்கும் மனத்தாழ்ச்சியை தரும்படி உம்மை மன்றாடுகிறோம்.

3. ஞானத்தின் தந்தையே இறைவா, எம் பங்கின் பெற்றோர் தங்கள் பிள்ளைகளை ஞானத்துடனும் பக்தி முயற்சியிலும் நல்ல ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கிடவும் ஞாயிறு மறைக்கல்விக்கு தவறாது, அனுப்பவும் அவர்களுக்கு அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

## 27.06.2017 அலெக்சாந்திரியா நகர் புனித சிரில் திருப்பலி

திருமதி. ராணி வில்சன்

**முன்னுரை**

புனிதர்கள் என்றால் குறையே இல்லாதவர் என்று பொருளில்லை. அதற்கு எடுத்துக்காட்டு புனித சிரில். இவரை முன்கோபி பொறுமையில்லாதவர் சற்று விவேகமற்றவர், என்று வரலாறு கூறுகிறது. யூதர்களின் செல்வங்களை பறித்து அவர்களை அலெக்சாண்டிரியா நகரிலிருந்து வெளியேற்றினார். ஆத்திரப்படுபவர் எனக் கூறுவர். ஆனால் கி.பி. 428ல் அந்தியோக்கியோவைச் சார்ந்த துறவி நெசுகோரியசு கான்சுடான்டின் நோபிளின் பேராயராக நியமனம் பெற்றார். இவர் இதை இயேசுவிடம் இரண்டு ஆண்டுகள் உண்டு எனும் தப்பறையை போதித்து வந்தார். இதை புனித சிரில் சுட்டிக்காட்டி கண்டித்தார். இருவரும் திருத்தந்தை

முதலாம் செலசுடீனிடம் இவ்விவாதத்தை முன் வைத்தனர். உரோமை ஆயர் குழு இதனை ஆராய்ந்து நெசுடோரியசு கூறுவது தவறு இதனை 10 நாட்களுக்குள் அவர் நீக்கிக் கொள்ள வேண்டும் என பணித்தது. ஆனால் அவர் பணியவில்லை. இதன் விளைவாகத்தான் ஏற்பட்டது மேற்கூறிய சிரில் மீதான குற்றச்சாட்டுகள். இதனாலேயே தான் தோன்றியது எபேசு பொதுச்சங்கம் கி.பி. 431ல். இதில் சிரில்தான் தலைமை. 200 ஆயர்கள் பங்கேற்றனர். சிரில்தான் திருத்தந்தையின் பிரதிநிதியாகவும் நியமனம் பெற்றார். இந்த பொதுச்சங்கம்தான் தப்பறையான கிறிஸ்துவின் தாய் என்பதை பொருந்தாது எனக்கூறி மரியன்னைக்கு "இறைவனின் தாய்" என்பதை பயன்படுத்த அறிவிக்கப்பட்டது.

## விசுவாசிகளின் மன்றாட்டு

1. அன்பு தந்தையே இறைவா, எம் தாய் திருஅவையின் தலைவர்கள் அனைவரும் புனித சிரில் போல் துணிச்சலாக தவறைச் சுட்டிக்காட்டி திருத்தி எம் திருஅவைக்கு பெருமைச் சேர்க்க அவர்களை பாதுகாத்து ஆசீர்வதித்து வழிநடத்திட வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
2. அன்பே உருவான இறைவா, இறைவன் ஆள்பார்த்து செயல்படுவதில்லை என புனித சிரிலின் வாழ்க்கை அனுபவத்தின் வழியாக எங்களுக்கு உணர்த்தியுள்ளீர். இறைமக்களாகிய நாங்களும் அதேபோல் வாழ வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
3. ஆறுதலே இறைவா, மழையில்லாமல் தமிழகம் மற்றும் அதன் நீர்நிலைகள் அனைத்தும் வறண்டுபோய் உள்ளது. விவசாயிகளும், மக்களும் நீருக்காக அவதிப்பட்டு போராடி வருகின்றனர். மண்குளிர, மனிதம் மனம் குளிர மழையை பொழிவித்து மனிதகுலம் வாழ உதவிட வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

## 29.06.2017 புனிதர்கள் பேதுரு - பவுல் பெருவிழா திருப்பலி

திரு. இம்மானுவேல் ஜெயராஜ்

### முன்னுரை

"நீர் மெசியா, வாழும் கடவுளின் மகன்" (மத் 16:17)
கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார் (கலா 2:20)

இயேசுவில் பிரியமுள்ள சகோதர சகோதரிகளே, இன்று திருச்சபை திருத்தூதர்களான பேதுரு பவுல் விழாவைக் கொண்டாடுகிறது. இவர்கள் திருச்சபையின் தடுமாற்றமில்லாத விசுவாசத் தூண்களாக கிறிஸ்துவை முழுவதும் உணர்ந்து ஏற்றுக்கொண்டபின் வாழ்ந்து நற்செய்தியை அறிவித்தார்கள். திருத்தூதர் பேதுரு கத்தோலிக்கத் திருச்சபையின் முதல் திருத்தந்தை ஆவார். இயேசு அலகையின் சோதனைகளுக்குப் பின்னர், கலிலேயாவில் தம் பணியைத் தொடங்கியபோது மீனவர் பேதுருவையும் அவர் சகோதரர் அந்திரேயாவையும் அழைத்தார். பேதுருவுக்கு

வின்னரசின் திறவு கோலையும் எல்லா அதிகாரங்களையும் வழங்கினார். திருத்தூதர் பவுல் பென்யமின் குலத்தைச் சேர்ந்த யூதக் குடும்பத்தில் கி.பி. 10ம் ஆண்டில் பிறந்தார். எருசலேம் சென்று புகழ் பெற்ற காமலியேல் என்னும் யூத ரபியிடம் கல்விப் பயின்றார்.

தமஸ்கு நகர கிறிஸ்தவர்களை துன்புறுத்தி கைது செய்வதற்காக அனுமதி பெற்றுச் செல்லும்போது கிறிஸ்து அவரைத் தடுத்து ஆட்கொள்கிறார். அனனியா எனும் கிறிஸ்துவர் வாயிலாக பிற இனத்தவருக்கு நற்செய்தி அறிவிக்கும் திருத்தூதராக கிறிஸ்து அழைப்பதை அறிந்து தம்மை முழுவதும் அர்ப்பணிக்கிறார். இம்மாபெரும் திருத்தூதர்களின் விழாவைத் திருச்சபை பெருவிழாவாகக் கொண்டாட நம்மை அழைக்கிறது. நாமும் இவர்களைப்போல இனி வாழ்வது நான் அல்ல கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார் என விசுவாசத்துடன் வாழ முடிவெடுத்துப் பக்தியுடன் இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. அன்புத் தந்தையே இறைவா, எம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்காக மன்றாடுகிறோம். அவரும் அவரோடு இறைவாழ்வில் உள்ள கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவியர், பொதுநிலையினர் அனைவரும் இறையரசு வாழ்க்கைக்கு அழைக்கப்பட்டதின் அர்த்தத்தை உணர்ந்து வாழத் தேவையான வரமரள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. இந்தப் பாறையின்மீது என் திருச்சபையைக் கட்டுவேன் என மொழிந்த இறைவா, இன்று உலகளவில் கத்தோலிக்கர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாக வத்திக்கானின் புள்ளி விவரத்தின் வழியாக அறிந்து இறைவனின் இரக்கப் பெருக்கத்தை நாம் கண்கூடாய் பார்க்க முடிகிறது. அலகையின் அராஜக ஆட்சியிலும் ஆண்டவரே, உமது பேரன்பு எம்மை அக்கறையோடு விசுவாச வாழ்வில் வழிநடத்துவதற்கு நன்றிகூறி தொடர்ந்து உமது பேரருளைப் பெற்று சாட்சிய வாழ்வு வாழ உம்மை மன்றாடுகிறோம்.

3. கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார் என உணரவைத்த இறைவா, உம்மக்களாகிய நாங்கள் சமாதானத் தூதுவர்களாகவும் வாழ்வில, செயலில், சொல்லில் சிந்தனையில் உமக்கு சாட்சிகளாகவும் தப்பறைக் கொள்களைகளை எதிர்ப்பவர்களாகவும் திருத்தந்தை பிரான்சிஸ் வழியில் நடந்து ஒரே கத்தோலிக்க திருச்சபையின் பிள்ளைகள் என வாழ்ந்துக்காட்ட தேவையான வரமருள உம்மை மன்றாடுகிறோம். வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## பள்ளி தொடக்க நாள் செபவழிபாடு

திருமதி. டிலைலா

நான் உனக்குப் போதித்து நீ நடக்க வேண்டிய வழியை
உனக்கு காட்டுவேன். தி.பா.32.8

**முன்னுரை**

எல்லாம் வல்ல அன்பு இறைவா உம்மை போற்றுகிறோம் உம்மை புகழ்கிறோம் உமக்கு நன்றி கூறுகிறோம். அன்பான ஆசிரியப்பெருமக்களே மாணவ மாணவிகளே இறைவனின் கனிவிரக்கத்தால் மீண்டும் இக்கல்வி ஆண்டினை தொடங்குவதற்கு நம் அனைவரையும் ஒரே குடும்பமாய் இறைவனின் முன்னிலையில் ஒன்று சேர்த்தமைக்கு நன்றி சொல்வோம். மேலும் கடந்த ஆண்டினைப் போல் இந்த கல்வி ஆண்டினையும் இறைவன் தன்னுடைய வல்லமையான கரங்களினால் ஆசீர்வதித்து நமக்கு வேண்டிய பாதுகாப்பு உடல் உள்ள நலம் தரவும் வாழ்வில் உயர்வு பெறவும் எதிர்பாராத விபத்துக்கள் ஆபத்துக்கள் பிரச்சனைகள் 10ஆம் 12ஆம் தேர்வில் நல்ல வெற்றியைப் பெறவும் மேலும் இக்கல்வி நிலையத்தில் பணிபுரியும் தலைமை ஆசிரியர் இருபால் ஆசிரியர்கள் அனைவரையும் இறைவன் ஆசீர்வதிக்க வேண்டும் என்று இச்செபவழிபாட்டில் செபிப்போம்

**குத்துவிளக்கு ஏற்றுதல்:** அறியாமை இருளை நம்மிடமிருந்து அகற்ற ஞானமே இருப்பிடமான ஒளியாம் இறைவனை இக்குத்துவிளக்கினை ஏற்றி நம்மத்தியில் வரவேற்போம்.

**பாடல்:** ஒளியாம் இறையே வாராய்...

**வழிநடத்துபவர் :** ஒளியின் வழியாக நம்மிடம் எழுந்தருளியுள்ள இறைவனின் வார்த்தைகளுக்கு செவிமடுப்போம்.

**இறைவார்த்தை:** சாலமோனின் ஞானம் 6:12-15

**வழிநடத்துபவர்:** இறைவனில் அன்பானவர்களே இந்நாள் நம் அனைவருக்கும் முக்கியமான நாளாகும். மகிழ்ச்சியாக விடுமுறையைக் கழித்து இனி அதிக நேரம் பள்ளியில் செலவிடப் போகிறோம். அறிவாற்றலையும் ஞானத்தையும் வளர்க்கும் இடமாக இப்பள்ளி அமைந்துள்ளது. ஞானத்தின் ஊற்று இறைவன், தெய்வமே ஞானத்தின் இருப்பிடம் எனவே இன்றைய நாளிலே ஞானத்தின் ஊற்றாகிய இறைவன் இந்த ஆண்டு முழுவதும் தம் ஞானத்தையும் அருள் வரங்களையும் பொழிய வேண்டுமென்று வேண்டி மன்றாடுவோம்.

### அடையாள காணிக்கை மன்றாட்டு

1. **தோட்ட மண்:** படைப்பின் பரம்பொருளே தாவரங்கள் பயிர்கள் செழிப்பாக வளர்வதற்கு வளமான மண் வளத்தை நீர் பூமிக்கு தந்தது போல மாணவ மாணவிகளான நாங்கள் படிப்பதற்கும், பள்ளியில் பணி புரிய ஆசிரியர்களையும் (பள்ளியின் பெயர்) பள்ளியையும் எங்களுக்கு தந்தமைக்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

இறைவா பூமியின் மண்வளத்தை ஆசீர்வதித்தது போல இப்பள்ளியை ஆசீர்பதிக்க வேண்டுமென்று அருள்வேண்டி இம்மண்ணை காணிக்கையாக்குகின்றோம் ஏற்று ஆசீர்வதியும்.

2. **விதைகள்:** ஞானத்தின் இருப்பிடமே இறைவா மாணவ மாணவிளாகிய எங்கள் அனைவரையும் ஒன்று சேர்ந்து இப்பள்ளியில் படித்து வாழ்வில் முன்னேற இப்பள்ளியென்னும் தோட்டத்தில் விதைகளாக விதைக்கப்பட்ட எங்களை உமது பாதத்தில் ஒப்புக்கொடுக்கிறோம். இறைவா நாங்கள் ஒவ்வொருவரும் வழி ஓரத்திலும், பாறை நிலத்திலும் முட்புதர்களின் நடுவிலும் விதைக்கப்படாமல் நல்ல நிலமான பலன்தரக்கூடிய நிலத்தில் விதைக்கப்பட்டு இறுதியில் 30,60,100 மடங்குகளாக பலன் தர வேண்டுமென்று செபித்து இந்த விதைகளை காணிக்கையாக்குகிறோம்

3. **தண்ணீர்:** நன்மைகளின் நாயகனே இறைவா நீர் எங்களுக்காக படைத்த தாவரங்கள் பயிர்கள் செழித்து வளரவும் அவைகள் கருகி வாடாமல் இருக்கவும் நீர் வளத்தை நிறைவாக தந்தமைக்கு நன்றி கூறுகிறோம். அதுபோல உம் பிள்ளைகளாகிய எங்கள் வாழ்வு வளம்பெறவும் எங்களை நேசித்து பாதுகாக்கவும் தியாகமும் பரிவும் உள்ள பெற்றோரை எங்களுக்கு நீர் தந்துள்ளீர். நீர் எங்களுக்கு தந்துள்ள பெற்றோரை மதிக்கவும் அவர்களுக்கு கீழ்படிந்து நடக்கவும் அருள்புரியும். எம் பெற்றோரை ஆசீர்வதித்து அவர்களுக்கு நல்ல உடல் நலமும் நீண்ட ஆயுளும் தரவேண்டுமென்று செபித்து இந்த தண்ணீரை காணிக்கை ஆக்குகின்றோம்.

4. **உரம்:** அறிவின் ஊற்றே இறைவா, தோட்டங்களில் செடிகள் வளரும்போதுபூச்சிகளாலும் களைகளினாலும் வளர்ச்சியில் பாதிப்புணு ஏற்படும்போது இவைகைள தடுக்க பாதுகாப்பு எடுக்கப்படுகிறது. அதுபோலவே மாணவ மாணவிகளைாகிய எங்களின் வளர்ச்சியை பாதிக்கும் தீய பழக்க வழக்கங்கள், பொறுப்பற்ற செயல்களை அகற்றி படிப்பில் ஆர்வம், நற்பண்புகள் திறமைகளை வளர்த்தல் போன்ற நல்ல உரங்களை எங்களுக்குத் தந்து எங்களை முன்னேற்றத்திற்கு உதவும் ஆசிரியர்களுக்கு நன்றி கூறுவதோடு இருபால் ஆசிரியர்களின் குடும்பங்களை நிறைவாய் ஆசீர்வதிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

5. நல்ல ஆசிரியர்கள், பாடத்திட்டங்கள் விளையாட்டு போட்டிகள் போன்றவைகளையும் பள்ளிகளில் பிரச்சனைகள், போராட்டங்கள், ஆபத்துக்கள் நேரிடும்போது இவைகளை எதிர்த்து போராடி பாதுகாக்கும் வேலியாக இருக்கும் எங்கள் பள்ளி முதல்வரை இறைவா நீர் நிறைவாய் ஆசீர்வதித்து இறுதிவரை உம்முடைய வல்லமையான கரத்தினால் வழிநடத்திட வேண்டுமென்று உம்மை இறைவா மன்றாடுகிறோம்.

**முதல்வர்:** எல்லாம்வல்ல அன்பு இறைவா, இங்கு கல்வி பயில்வோர், பணிபுரிவோர் அனைவரையும் ஆசிர்வதித்தருளும். உலகின் ஒளியாகிய

உம்மை பலியாக ஏற்று அனைவரையும் ஏற்று அன்பு செய்து தங்களுடைய ஞானத்தாலும், ஆற்றலாலும், திறமைகளாலும் தங்களுக்கும் பிறருக்கும் உயர்வை கொண்டுவர கிருபை செய்தருளும். இவையனைத்தும் எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

# பகுதி 2: விசுவாசத்தில் வளர...

## 1. தூய ஆவியாரும் இன்றைய கிறிஸ்தவ வாழ்வும்

திரு. விக்டர்

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை விசிவாசித்து அவரை நம் சொந்த மீட்பராக ஏற்றுக் கொண்டதினால் நாம் கிறிஸ்தவரானோம். அதனால் நமக்கு அதிகாரம் பெற்ற பிள்ளைகள் (யோவா 1:12) என்கிற உரிமை கிடைக்கிறது. இந்த பிள்ளைகளுக்குத்தான் "என்னுடையதெல்லாம் உன்னுடையதே (லூக்.15.31) என்று பிதாவாகிய கடவுள் தமக்குரியவை யாவற்றையும் நமக்கு உரிமையாக்குகின்றார். ஒரு வீட்டில் உள்ள பிள்ளைகள் எப்படி அந்த வீட்டின் தகப்பனால் வழிநடத்தப்பட்டு செம்மையாக்கப்படுகிறார்களோ அதைப்போலவே அதிகாரம் பெற்ற பிள்ளைகள் என்கிற சிறப்பு மரியாதை பெற்ற நாமும் ஏற்புடைய ஒருவரால் வழிநடத்தப்பட வேண்டும் என்பதை உணர்ந்த கடவுள் தமது பரிசுத்த ஆவியானவரை அதற்கென்று அனுப்பி வைக்கின்றார். இவரால் வழிநடத்தப்பட்டால் மட்டுமே நாம் கடவுளின் பிள்ளைகள் என்கிற நிலை உறுதிப்படுத்தப்படும். (உரோ.8.14) இவரது வழிநடத்துதலுக்கு நம்மை விட்டுக் கொடுக்காமல் நாம் பெயரளவிற்கு மட்டுமே கிறிஸ்தவர்களாய் இருக்கிறோம். ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய வாழ்வும் பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்பட்டே ஆகவேண்டும் என்பது உறுதியாகிறது. இது தந்தையின் சித்தமும் திட்டமும் ஆகும்.

### யார் இந்த பரிசுத்த ஆவியானவர்

தூய ஆவியானவர் சகலத்தையும் செய்ய வல்லவர் ஏனெனில் இவர் நிழலிட்டதால் தான் அன்னை மரியாளிடம் இயேசு உருவானார். (லூக் 1.35) திருப்பாடல்கள் 139ல் சொல்லப்பட்டு இருப்பது போல் இவர் எங்கும் நிறைந்தவராய் இருக்கின்றார். ஆள் தன்மையிலும் இறை தன்மையிலும் பிதாவாகிய கடவுள் போலும் அவரது திருமகன் இயேசுவைப்போலும் இருப்பதால் தான் இவரை கடவுளின் மூன்றாம் ஆளாகிய பரிசுத்த ஆவியானவர் என்று அழைக்கின்றோம். ஆகவே தான் இந்த தூய ஆவியானவரால் நாம் நடத்தப்படுவதற்கு தந்தையாகிய கடவுள் சித்தம் கொண்டார். எனவே நமது வாழ்வை அவரிடம் ஒப்படைப்போம். அவர் நம்மை வழிநடத்துவார்.

ஒரு கிறிஸ்தவனுடைய வாழ்வில் கடவுளுக்கும் நமக்கும் உறவை உண்டுபண்ணி அதை அதிகப்படுத்துவது தான் தூய ஆவியின் முக்கிய அலுவல். ஒரு கிறிஸ்தவனுடைய வாழ்வில் அவனை

கடவுளுடன் உறவுகொள்ளச் செய்வது "செபம்" என்கிற சாதனமாகும். இதன் வழியாகத்தான் உறவை உண்டாக்கிக் கொள்கிறோம் அதை வளர்த்தெடுக்கிறோம். ஆனால் செபிக்க வேண்டிய வேளைகளில் செபிக்கத் தெரியாமல் நாம் தடுமாறுகிறபோது நமக்காக பரிந்து பேசி நம்மை செபிக்க வைக்கிறவர் தூய ஆவியானவர் ஆவார். (உரோ.8.26) இன்றைக்கு நம்முடைய கத்தோலிக்க குடும்பங்களில் சுயமாக சரளமாக செபிக்கத் தெரிந்தவர் எத்தனை பேர்? அப்படி நாம் செபிக்க முடியாதபடி பிசாசானவன் "அறியாமை" என்கிற கயிற்றால் நமது நாவுகளை கட்டி வைத்துள்ளான். மேலும் நமது அறிவுக் கண்களை கட்டிவைத்து குருடாக்கியுள்ளான். (2கொரி.4.4) இந்த கட்டுக்களை எல்லாம் அறுத்தெரிந்து நம்மை சுயமாக செபிக்க வைக்கிறார் தூய ஆவியானவர். இதுதான் நாம் கடவுளின் பிள்ளைகளாவதற்கு முதல் படி

இரண்டாதாக கடவுளின் வார்த்தைகளைக் கற்றுக்கொடுத்து அவைகளை வாழ்வாக்க தூய ஆவியானவர் உதவி செய்கிறார். ஏனெனில் தூய ஆவியானவரினால் ஏவப்பட்டு மனிதர்களால் எழுதப்பட்ட இது ஒரு போதும் மனித விருப்பத்தினால் உண்டானது அல்ல. (2பேதுரு1.21) ஆதலால் தான் கடவுள் வார்த்தைகள் உயிருள்ளது, ஆற்றல் வாய்ந்தது. உள்ளத்தின் சிந்தனைகளையும் நோக்கங்களையும் சீர்தூக்கிப் பார்க்கிறது (எபி 4.12) என்று ஆசிரியர் விளக்குகிறார். இந்த வார்த்தைகளை நமக்கு விளக்கி சொல்லிக் கொடுப்பவர் தூய ஆவியானவர்.

மூன்றாவது என்றைக்கு முதல் மனிதன் பாவம் செய்து தன்னுடைய தெய்வ சாயலை இழந்து போனானோ அன்றிலிருந்து மனிதன் பாவ சுபாவம் உள்ளவனாக மாறிப்போனான். இதைக்குறித்தே "நான் விரும்பும் நன்மையை செய்வதில்லை, விரும்பாத தீமையையே செய்கிறேன் இதை நானாகச் செய்யவில்லை என்னில் குடிகொண்டுள்ள பாவமே அதைச் செய்கிறது (உரோ.7.19-20) என்று தூய பவுல் தன்னுடைய இயலாமையை வெளிப்படுத்துகிறார். இப்படி நம் வாழ்வில் அறிந்தும், அறியாமலும் செய்த நம் பாவங்களை உணரவைத்து கடவுளோடு மீண்டும் உறவு கொள்ளச் செய்கிறவர் தூய ஆவியானவரே ஆவார்.

நான்காவதாக பயத்தினாலும் துன்பத்தினாலும் சோர்ந்துபோயுள்ள நம்மை பலப்படுத்தி புதுப்படைப்பாக்கி ஆண்டவருக்குப் பிரியமான சாட்சிகளாக மாற்றுகிறவர் தூய ஆவியானவர் (தி.தூ.1.8). தூய ஆவியானவர் வரும்போது அவர் முழு உண்மையை நோக்கி நம்மை வழிநடத்துவார் (யோவா 16.13) இந்த தூய ஆவியார் நம்மை நடத்துவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்? நாம் மறுபடியும் பிறக்க வேண்டும். ஏனெனில் மறுபடியும் பிறந்தாலன்றி எவரும் இறையாட்சியைக் காணவே முடியாது (யோவா 3.3) என்று கூறிய ஆண்டவர் தண்ணீரினாலும் தூய ஆவியாலும் பிறந்தாலன்றி எவரும் இறையாட்சியைக் காணமுடியாது (யோவா.3:6)

என்றும் கூறுகின்றார். மறுபடி பிறத்தல் அல்லது சாட்சிய வாழ்வு என்பது ஒரே நாளில் நடந்து முடிகிற அனுபவம் அல்ல. மாறாக நம் வாழ்வின் ஒவ்வொரு நாளிலும் இந்த அனுபவம் புதுப்பிக்கப்பட்டுக் கொண்டே இருக்க வேண்டும் இதை நமக்கு உணர்த்தி ஒவ்வொரு நாளும் நம்மை வழிநடத்திக் கொண்டு இருப்பவர் தூய ஆவியாராகும்.

ஐந்தாவதாக திருமுழுக்கு பெற்று இயேசுவை மீட்பராக ஏற்றுக் கொண்டு சீடனாய் இருக்கின்ற ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் நற்செய்தி அறிவிப்பது என்பது தலையாய கடமையாகும். ”நீங்கள் போய் எல்லா மக்கள் இனத்தாரையும் சீடராக்குங்கள் நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைபிடிக்கும் படி கற்பியுங்கள். (மத். 28:19-20) என்று இயேசு தன்னுடைய சீடர்களுக்கு கட்டளையிட்டதன் மூலம் நற்செய்தி அறிவிப்பை அவர் விரும்புகின்றார் எதிர்ப்பார்க்கின்றார், கட்டளையாகவும் தந்துள்ளார் என்பதை அறிய முடிகிறது.

இப்படி நற்செய்தி அறிவிக்கச் செல்லும் முன் நீங்கள் காத்திருந்து தூ ய ஆவியாரையும் பெற்றுக் கொள்ளுங்கள் (தி து 1.8) என்று இயேசு நம்மை வலியுறுத்துகிறார் எனவே நமது நற்செய்தி அறிவிப்பு பணிக்கு தூ ய ஆவியாரின் துணை அவசியமாகிறது. அவர் நமது துணையாளராக மட்டுமல்ல நமக்கு அற்புதங்களைச் செய்யும் வரங்களையும் நோயிலிருந்து குணமாக்கும் வரங்களையும் சிறந்த சொல் வளத்தினையும் இறைவாக்குரைக்கும் ஆற்றல்களையும் ஆவிக்குரியவற்றை பகுத்தறியும் ஆற்றலையும் பரவசப்பேச்சு ஆற்றலையும் அதற்கு விளக்கம் சொல்லும் ஆற்றல்களையும் (1கொரி12:8-10) தருகிறார். இவற்றால் நாம் ஊக்கமடைந்து நற்செய்தி அறிவிப்பை சிறப்புடன் செய்ய வல்லமை பெறுகிறோம்.

## 2. புனித அந்தோணியார் - புகழும் புதுமைகளும்

திரு. ஜான் சுரேஷ்

கோடி அற்புதர், புதுமை வள்ளல், அற்புத போதகர், ஏழைகளின் நண்பன், மறைவல்லுநர், அழியா நாவுடையவர், காலத்தின் அறிகுறிகளைத் தெரிந்து திருமறைக் காத்த இறைவாக்கினர், நற்செய்தியைச் சொல்லாலும் செயலாலும் அறிவித்த இறைத்தூதர் என பலவாறு புகழப்படும் ஒரே புனிதர் நமது பதுவை அந்தோணியார். கத்தோலிக்கர்க்கு மட்டும் அல்லாது பிற மதத்தவராலும் புகழப்படும் புனிதர் நமது பதுவை அந்தோணியார். மேலும் ஒருபடி இவரை புகழ வேண்டுமாயின் அன்னை மரியாளுக்கு அடுத்தபடியாக உலகிலுள்ள அனைத்து கத்தோலிக்க தேவாலயங்களிலும் இவரது திருவுருவம் இல்லாத ஆலயம் ஒன்றும் இல்லை என்று சொல்லும் அளவுக்கு மேன்மைமிக்கவராய் விளங்குகின்றார்.

புனித அந்தோணியார் 1195ம் வருடம் ஆகஸ்ட் 15 அன்று போர்ச்சுக்கல் நாட்டின் தலைநகரான லிஸ்பனில் பிறந்தார். இவரது இயற்பெயர் பெர்தினாந்து இவரது சிறுவயதில் ஒருமுறை நற்கருணை முன்

முழந்தாள்படியிட்டு செபித்துக்கொண்டிருந்தார். அப்போது அவர்முன் தோன்றிய அலகை அவரை சோதிக்கப் பார்த்தது. கலக்கம் ஏற்பட்டாலும் தான் முழந்தாள் படியிட்டிருந்த சலவைக்கல்லில் பக்தியுடன் சிலுவை அடையாளம் வரைந்தார். அது அப்படியே பதிந்து விட்டது. இதை பார்த்ததும் அலகை அலறியடித்து ஓடியது இன்றளவும் அந்த சலவைக்கல்லில் சிலுவை அடையாளம் இருந்து வருகிறது. இவ்வாறு சிலுவையின் மகத்துவத்தை தம் 12ம் வயதில் உணர்ந்தார். இறை அழைப்பையும் இதன்மூலம் உணர்ந்தார்.

ஒருமுறை குருமடத்தில் தோட்ட வேலை செய்துக்கொண்டிருந்தபோது அருகிலுள்ள ஆலயத்தில் திருப்பலியில் நற்கருணை எழுந்தேற்றம் நடைபெற்றது. உடனே பீடத்தை நோக்கி மண்டியிட்டு செபித்தார். அப்போ அருகிலிருந்த சுவர் விலகியது. தோட்டத்திலிருந்தே இயேசுவைக் கண்டு ஆனந்தித்தார். 1219ம் குருத்துவ திருப்பொழிவு பெற்றார். பிரான்சிஸ்கு அசிசியாரின் தாழ்ச்சி, சரித்திரம், ஆன்ம தாகம், கீழ்ப்படிதல் இவற்றைக் கண்டு பிரான்சிஸ்கு சபையில் சேர்ந்தார். பெர்தினாந்து என்ற பெயருக்கு பதிலாக அந்தோணியார் என்று பெயர் சூட்டப் பெற்றார்.

புதுமைகளுக்கு சொந்தக்காரர் நமது அந்தோணியார் போர்சுகல் நகரில் சில்லர்டு என்ற யூதன் நற்கருணையில் இயேசு இல்லை என்றான். அவரது சவாலுக்கு தயாரான அந்தோணியார் பட்டினியான கழுதை தனக்கு முன் வைக்கப்பட்ட உணவை உண்ணாமல் மண்டியிட்டு நற்கருணையை வணங்க செய்தார். தம் நண்பர் டிகொ பிரபுவின் வீட்டில் தங்கியிருந்த போது குழந்தை இயேசுவை கரங்களில் ஏந்தும் பாக்கியம் பெற்றார். மக்கள் இவர் மறையுரையை கேட்காததால் மீன்களுக்கு நற்செய்தியை போதித்தார். பிரிவினை சபையினர் பொறாமையோடு உணவில் விஷம் வைத்து உணவு பரிமாறியபோது சிலுவை அடையாளம் வரைந்து விட்டு அதனை உண்டார். எத்தீங்கும் அடையாத அந்தோணியாரைக் கண்டு அனைவரும் மனம்திரும்பினர். இவ்வாறு பல புதுமைகளை பல செய்தார். 1231ம் ஆண்டு ஜூன் 12 அன்று தமது 36ம் வயதில் இறந்தார். இன்றளவும் இவரது நாவு அழியாது நிலையில் உள்ளது தம்மை நம்பி வருபவர்களுக்கு இடைவிடாது இறைவனிடம் பரிந்து பேசி இன்றளவும் பல புதுமைகளை நமக்கு செய்து கொண்டிருக்கிறார்.

## 3. இயேசுவின் திருஇருதயம் - வெளிப்பாட்டின் வரலாறு

திரு. புல்லோன் ஜோ லூயிஸ்

ஜூன் திங்கள் என்றால் உடனே அனைத்து கத்தோலிக்கர்களின் மனக்கண்முன் இயேசுவின் திரு இருதயம் நிழலாடும். இயேசுவின் இதயத்தைத் தியானிக்க நமக்கு அளிக்கப்பட்ட அற்புதமான மாதம். அவரின் இதயம் அன்பின் பிறப்பிடம், ஆறுதலின் உறைவிடம், இன்பத்தின் இருப்பிடம், உறவுகளின் சங்கமம், கருணையின் வற்றாத நதி. இந்த இதயத்தின் இயக்கம் அன்பு செய்யவும், அன்பினைப் பெறவுமே. மாண்பின் இத்தகு திருஇருதயம் வணக்கத்திற்குரியது. இத்திரு இருதய பக்தி, வணக்கம் கத்தோலிக்கத் திருச்சபைக்கு மட்டுமே உரித்தானது

ஒரு மாபெரும் கொடையும் கூட. நமது விசுவாசம், நம்பிக்கை, அன்பு ஆகியவற்றின் பிறப்பிடமும் ஊற்றும் உயர்வும் இயேசுவின் இதயமே. இத்தகு இயேசுவின் திருஇருதய பக்தி நம்மை இறையன்பில் உறவில் பற்றுறுதி கொள்ள உதவுகிறது.

இந்த திருஇருதய பக்தி, புனித ஆன்சலம், புனித பெர்னார்டு வாழ்ந்த காலக்கட்டத்தில் அதாவது கி.பி. 1050 மற்றும் கி.பி. 1150ம் ஆண்டுகளில் தோன்றியது. கி.பி. 12ம் நூற்றாண்டிலிருந்து தான் இப்பக்தி முயற்சிகத்தோலிக்கத் திருச்சபையினரிடையே மலரத் தொடங்கியது. இறையியல் வல்லுநர்களான புனித பெலவேந்திரன் புனித பெரிய கெத்தூர்த்து இவர்களின் காலத்தில் இப்பக்தி பிரபலமானது, வரையறுக்கப்பட்டது. இயேசுவின் அன்பு, இரக்கம், கனிவு, பரிவு, பாசம், கையளிப்பு ஆகிய மறைபொருள்கள் திருச்சபையில் ஆழமான பாதிப்பை உண்டு பண்ணியது. ஆழ்ந்த தியான செபங்கள் தோன்றின. புனித பெரிய ஆல்பர்ட், புனித சிரியா கத்தரீன், புனித பிரான்சிஸ் தெ சேல்ஸ் மற்றும் புனித ஆசீர்வாதப்பர் சபையினர், தோமினிக்கன் சபையினர், கர்த்தூ சியஸ் சபையினரின் தீவிர முயற்சியால் இத்திரு இதய பக்திப் பழக்கம் உலகெங்கும் பரவியது.

பிரான்ஸ் நாட்டில் பாரே-லே-மோனியல் என்னும் இடத்தில் சந்திப்பு மட ஆலயத்தில் கி.பி. 1673-1675ல் புனித மார்கரெட் மேரி அலகோக் என்னும் அருட்சகோதரி இயேசுவின் திரு இருதய காட்சிகள் பல கண்டார். அதுசமயம் இயேசுவின் திரு இருதய பக்தியைக் கடைபிடிப்போருக்கு 12 சிறப்பான வாக்குறுதிகளை அப்புனிதையின் வாயிலாக மாதத்தின் முதல் வெள்ளி மற்றும் வருடாந்திர விழா நாட்களில் இயேசுவின் திரு இருதயத்திற்கு அர்ப்பணிக்க அறிவுறுத்தினார். கி.பி. 1765ம் ஆண்டு முதல் திருச்சபையின் வழிபாட்டு கால அட்டவணையில் அதிகாரப்பூர்வமாக இயேசுவின் மகிமைக்காக ஒருநாள் ஒதுக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து திருத்தந்தையர்கள், 9ம் பத்திநாதர் 13ம் சிங்கராயர் 11ம் பத்திநாதர் முதலியோர் இப்பக்தி பழக்கத்தை மிகவும் ஊக்குவித்தனர்.

கி.பி. 1856ம் ஆண்டு திருத்தந்தை 9ம் பத்திநாதர் இப்பக்தியை ஊக்குவித்ததோடு தனிக்கத்தோலிக்கர் குடும்பம், குழுக்கள், துறவற சபையினர் அனைவரையும் இயேசுவின் திரு இருதயத்திற்கு தங்களை அர்ப்பணிக்க அறிவுறுத்தினார். புனித கிரேஸ்தேவில் பெரியும் என்பவருக்குக் கிடைத்த சாட்சிகளின் அடிப்படையில் கி.பி. 1899ல் ஆண்டில் திருத்தந்தை 13ம் சிங்கராயர் அனைத்துலகையும் இயேசுவின் திரு இருதயத்திற்கு பரிகாரம் செய்வதின் அவசியத்தைக் குறித்து ஒரு திருமடல் எழுதினார். முதல் வெள்ளிக்கிழமை தலைவெள்ளிக்கிழமை பக்தி பரவலாயிற்று.

திருத்தி அமைக்கப்பட்ட திருவழிபாட்டு புதிய பதிப்பில், இயேசுவின் திருஇருதய விழா, தூய ஆவியின் பெருவிழாவை அடுத்து 2ம் வாரத்தில் கொண்டாட ஆணையிட்டது. இப்பக்தி முயற்சி ஆரம்பத்தில் குறிப்பிட்டதுபோல் கத்தோலிக்கர்களுக்கே உரியது. ஆங்கில, பிரிட்டன், இறையியலார்களான புனித ஈசாக்கு அப்புரோ, புனித பெர்னார்டு மற்றும் புனித தாமஸ் காட்வின் போன்றவர்கள் இத்தகு இருதய பக்தியினைப்பற்றி விளக்கமாக எழுதியுள்ளனர். ஆராதனைக்கும் வணக்கத்திற்கும் புகழ்ச்சிக்கும் உரிய இயேசுவின் திரு இருதயம் திரு இருதய பக்தி பழக்கம் இன்று நாம் வாழும் காலக்கட்டத்தில் பரவலாக இருப்பினும், இயேசுவின் திரு இருதயத்திற்கு மிகுந்த வருத்தம் தரும்படியானவைகள் மலிந்துள்ளன.

மனித நேயமற்ற மனிதாபமானமற்ற வன்ம செயல்கள் மிகுந்துள்ளன. இயேசுவின் இதயம் இரத்தத்தைக் கசிந்து கொண்டிருக்கிறது. ஏனெனில் இந்த அன்பு காயப்படுகிறது. கல்வாரி மலையில் மனிதர்களுக்காக நொறுங்கியது அவரது உள்ளம். இந்த அன்பை மனிதர்களாகிய நம்மில் காண்பது அரிது. ஆனால் அன்புக்கு எதிரான பகைமை, வஞ்சகம், பழிக்குப்பழி போன்ற தீமைகள் விஞ்சுகின்றன. இயேசுவின் திரு இருதத்தைப் போன்று நம் இதயம் விளங்க வேண்டும். புனித சின்ன தெரசம்மாள் செபிக்கும்போதெல்லாம் "இதயத்தில் தாழ்ச்சியும், சாந்தமும் உள்ளஇயேசுவே, என் இதயத்தை உமது இதயத்தைப்போல் ஆக்கியருளும்" என்றே வேண்டிக்கொள்வார்.

இயேசுவின் திரு இருதய பக்திக்காய் ஒவ்வொரு இல்லங்களிலும் திரு இருதய படத்தை திருநிலைப்படுத்தி பெரிதாக வைத்திருந்தால் மட்டும் போதாது. நம்மைப் பகைப்பவர்களையும் மனதார அன்பு செய்ய வேண்டும். இயேசுவின் திரு இருதய படத்திற்கு அணையா விளக்கேற்றி தூபம் இட்டு வணங்கினால் மட்டும் போதாது நம் நெஞ்சங்களில் அன்பு எனும் தீபம் போட்டி, பொறாமை, பேராசை, பொருளாசை, காமம், கோபம் போன்ற சூறாவளிப் பேய்க்காற்றில் அணைந்து போகாது பாதுகாக்க வேண்டும். அழுக்காறு கொள்ளாது அடக்க ஒடுக்கமாக ஆடம்பரமற்ற, ஆர்பாட்டமற்ற, வாழ்வு எனும் விளக்குத் தண்டின்மேல் நம் இதய தீபம் வைக்கப்பட வேண்டும். ஏற்றத்தாழ்வு, சாதிய வேறுபாடு, கல்லாமை போன்ற குறைபாடுகளைக் களைந்து எரியும்போதுதான் உண்மையிலேயே நாம் திரு இருதய அன்பிற்குச் சொந்தக்காரர்களாகிறோம்.

இன்று மனிதருக்கு வேண்டியது கொஞ்சம் மனித நேயம். அதை இயேசுவின் இதயத்திடமிருந்து பெற்றுக்கொள்வோம். அதற்கு உண்மை என்ற உழவு செய்து, அன்பு நீர் பாய்ச்சி, பொய்மைகளை அகற்றி, உவகை அன்பின் இதயமாம் இயேசுவின் அன்பில் வேரூன்றி பிறரன்பில் நிலைத்திருப்போம்.

## 4. திருச்சபை செய்திகள்

சகோ. சுரேஷ் இயேசுபாலன் சச.

1. பாத்திமா நகரில் அன்னை மரியா தோன்றியதன் நூற்றாண்டு விழாவைச் சிறப்பிக்க அங்கு திருத்தூதுப் பயணம் மேற்கொள்ளும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் மே மாதம் 13ம் தேதி இடையர்களான கோ மார்த்தோ, ஜெசிந்தா மார்த்தோ என்ற இருவரையும் அத்திருத்தலத்தில் புனிதர்களாக உயர்த்தினார். இடையர் குழந்தைகளான பிரான்சிஸ்கோ, ஜெசிந்தா இருவரின் பரிந்துரையால் நிகழ்ந்த ஒரு புதுமையை மார்ச் மாதம் 23ம் தேதி திருத்தந்தை ஏற்றுக்கொண்டதையடுத்து இந்த நூற்றாண்டு விழா புனிதர் பட்ட விழாவாகவும் உருவெடுத்துள்ளது. 10 வயது நிறைந்த பிரான்சிஸ்கோவும், 9வயது நிறைந்த ஜெசிந்தாவும் புனிதர்களாக உயர்த்தப்படும்போது கிறிஸ்துவுக்காக தங்கள் உயிரைத்துறந்த குழந்தை மறைசாட்சிகள் அல்லாமல் திரு அவையில் மிகக் குறைந்த வயதில் புனிதர் பட்டம் பெற்றவர்கள் என்ற பெருமையை இவர்கள் இருவரும் பெறுவர். இவ்விருவரையும் 2000ம் ஆண்டு மே மாதம் 13ம் தேதி புனித திருத்தந்தை 2ம் ஜான்பால் அருளாளர்களாக உயர்த்தினார்.
2. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை அமெரிக்க நாட்டு அரசுத்தலைவர் டொனால்டு டிரம்ப் அவர்கள் இம்மாதம் 24ம் தேதி புதன்கிழமை, காலை 8.30 மணிக்கு வத்திக்கானில் சந்திப்பார் என திருப்பீடச் செய்தித் தொடர்பகம் அறிவித்துள்ளது.
3. எத்தகைய துன்பத்திலும் இயேசுவுக்கு பணியாற்றுவதில் மகிழ்ச்சியைக் காண்போம். இரட்டை வாழ்க்கை என்பது ஒரு மிகப்பெரிய கொடிய நோயாகும் என குருத்துவ திருப்பொழிவு திருப்பலியில் மறையுரையாற்றினார் திருத்தந்தை பிரான்சிஸ். உரோம் நகரிலுள்ள பல்வேறு அருள்பணியாளர் பயிற்சி இல்லங்களில் பயின்று வந்த 10 தியாக்கியோன்களை, அருள்பணியாளர்களாக அருள்பொழிவுச் செய்த திருப்பலியில் மறையுரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் குருத்துவம் என்பது ஒரு வேலையல்ல. மாறாக அது ஒரு பணியாகும் என்றார்.
4. அறிவியலும், மதமும் ஒன்றுக்கொன்று முரணானவையல்ல. ஆனால் விண்வெளியின் புதிரானவைகளை வெளிப்படுத்துவதில் இடம்பெறும் தொடர் தேடுதலில் இவையிரண்டும் ஒன்றிணைந்துள்ளன என, வத்திக்கான் அதிகாரி ஒருவர் கூறினார். "விண்வெளியில் கரும்புள்ளிகள், மற்றும் புவிஈர்ப்பு அலைகள்" குறித்து காஸ்தெல்கொந்தோல்ஃபோவிலுள்ள வத்திக்கான் வானியல் ஆய்வு மையத்தில் தொடங்கிய நான்கு நாள் கருத்தரங்குப் பற்றி செய்தியாளர்களிடம் அறிவித்த, வத்திக்கான் வானியல் ஆய்வு மைய இயக்குநர் இயேசுசபை அருள் சகோதரர் Guy Consolmagno அவர்கள் இவ்வாறு கூறினார்.
5. அணுஆயுதங்களிலிருந்து முற்றிலும் விடுதலை பெற்ற ஓர் உலகை உருவாக்க, திருஅவை தன் முழு ஆதரவை அளிப்பதோடு அதற்காக

முழுவீச்சுடன் உழைக்கவும் தயாராக உள்ளது என்று திருப்பீட உயர் அதிகாரி ஒருவர் கூறினார். போரற்ற உலகம் என்பதைக் காட்டிலும் அமைதியும் உடன் பிறந்த உணர்வும் நிலவும் உலகத்தை வளர்ப்பதில் திருத்தந்தையர் எப்போதும் கவனம் செலுத்தி வந்துள்ளனர் என்பதைச் சிறப்பாகக் குறிப்பிட்ட அருள்பணி Urbanczyk அவர்கள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் உலக அமைதி நாளுக்கென வெளியிட்ட செய்தியையும் குறிப்பிட்டார்.

6. நைஜிரியாவில், போக்கோ ஹராம் முஸ்லிம் புரட்சியாளர்களால் கடத்தப்பட்டிருந்தவர்களில் 82 சிறுமிகள், மீண்டும் தங்களின் குடும்பங்களோடு இணைந்திருப்பது குறித்து கடவுளுக்கு நன்றி கூறிய அதே வேளை இச்சிறுமிகளை விடுதலை செய்வதற்கு மூன்றாண்டுகள் காத்திருந்ததன் நோக்கம் புரியவில்லை எனக் கூறியுள்ளார் அந்நாட்டு கர்தினால் துழாெ முடமுசரகெநஅை மூயெலைநமயெ. இன்னும் விடுதலை செய்யப்படாமலிருக்கும் நூற்றுக்கு மேற்பட்ட சிறுமிகளின் நிலைமை என்னவென்று தெரியவில்லை என்றும் கூறியுள்ள, அபுஜா பேராயர் கர்தினால், மூயெலைநமயெ அவர்கள் இவர்களின் விடுதலைக்காகச் செபிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

## அடுத்த சுடரில்

### பகுதி 1 வழிபாட்டு வழிக்காட்டி

புனித தோமையார்
புனித மரிய கொரற்றி
புனித பெனடிக்ட்
புனித பொனெவெந்தூர்
அருளாளர் ஆன்மரி ஜாவுஹே
புனித கமில்லஸ்
புனித லாரன்ஸ்
புனித மகதலா மரியா
புனித யாக்கோபு திருத்தூதர்
புனித சுவக்கின் அன்னம்மாள்
புனித அல்போன்சா
புனித இஞ்ஞாசியார்
பொதுக்கால ஞாயிறுகள்

### பகுதி 2: விசுவாசத்தில் வளர...

புனித அல்போன்சா - இந்தியாவின் புனிதை
புனித இஞ்ஞாசியாரும் இயேசு சபையும்
குளுனி சபையின் வரலாறும் பணியும்
திருச்சபை செய்திகள்

## சுடர் வாசகர் போட்டி 35 சரியான விடைகள்

1. 12ம் பத்திநாதர்
2. சிலுவையில் அறையப்பட்டு
3. தூய யாக்கோபு
4. 1857
5. நல்லாயன் ஞாயிறு மற்றும் தேவ அழைத்தல் ஞாயிறு
6. தூய மசரெல்லோ
7. 1872 ஜீலை 31
8. அன்னை மரியாளே நமது சபையின் தலைவி
9. 1957 ஜீன் 24
10. மாவீரன் நெப்போலியன்
11. அயின்கரீம்
12. அருள்நிறைந்த மரியே... கிருபை தயாபத்து...
13. பாவியான சிறை கைதிகளின் பாதங்களை
14. பிரேசில், மெக்சிகோ, பிலிப்பைன்ஸ், அமெரிக்க ஐக்கிய நாடு, இத்தாலி, பிரான்ஸ், கொலம்பியா, ஸ்பெயின், காங்கோ, அர்ஜென்டினா
15. 41வயது மதிக்கத்தக்க சமந்தர் சிங் என்பவரால் குறைந்தது 50 முறைகள் கத்தியால் குத்தப்பட்டு இறந்தார்.

### பரிசு பெற்றவர்கள்

அ. பிரான்சிஸ் அலாய்சியஸ், சென்னை

சகோ. தமிழ்ச்செல்வி, புதுக்கோட்டை

ச. குழந்தை தெரேசா, திண்டுக்கல்

### தீபகச் சுடர்

அன்பு வாசகர்களே!

மாதம் தவறாமல் ஒரு பிரதிப்பெற ஆண்டு சந்தா ரூ. 100/ செலுத்தி உங்கள் பெயரை பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

**தீபகம்**
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை-600 010.
தொலைப்பேசி: 044-26428162.

பெயர்:....................................
முகவரி:..................................
..........................................
..........................................
..........................................

தொலைப்பேசி: ..................

## சுடர் வாசகர் போட்டி 36

1. திருத்தந்தை 2ம் ஜான்பால் யாரை மரியன்னை பக்திக்கு காரணம் என்று புகழாரம் சூட்டினார்?
2. யாருடைய கனவில் அன்னை மரியும், இயேசுவும் அவரை வான்வீட்டிற்க்கு அழைத்து சென்றனர்?
3. கடவுளின் அன்பு உண்மையான அன்பு ஏன்?
4. நம் ஆண்டவரின் உயிர்ப்பு எவற்றிற்கு வாழ்வின் அடித்தளமாகவும் விசுவாசத்தின் ஊற்றாகவும் இருக்கிறது?
5. இயேசுவின் ஊர்வலம் நமக்கு நினைவுப்படுத்துவது என்ன?
6. உண்மை பக்தி மற்றும் செபமாலையின் இரகசியம் என்ற புத்தகங்களை எழுதியது யார்?
7. இயேசு பாசத்தின் சிகரமாக, அனுதாபத்தின் ஊற்றாக மிளிர்கிறார் என வெளிப்படுத்தும் நிகழ்வு எது?
8. பெரிய விழாயன் அன்று கொண்டாடப்படும் மூன்று முக்கிய நிகழ்வுகள் யாவை?
9. யாருடைய இல்லம் ஆதிகிறிஸ்தவர்கள் கூடும் இடமாக இருந்தது?
10. நம் ஆண்டவரின் எதிர்பார்ப்பு நம் ஆன்மா மட்டுமே என்பதன் எடுத்துக்காட்டு எங்கே காண்கிறோம்?
11. புனித மாற்கு யாருடைய நற்செய்தி பணிகளில் பங்கேற்றார்?
12. இயேசுவின் உயிர்ப்பில் தோமாவும், பேதுருவும் கண்டடைந்தது என்ன?
13. இயேசுவின் உயிர்ப்பு யாருடைய உயிர்த்தெழுதலுக்கு ஒப்பாகது?
14. ஏதனை அடிப்படையாக கொண்டு கிறிஸ்தவம் வாழ்கிறது?
15. குரவேசியா நாட்டில் உள்ள மரியன்னையின் சிலை எத்தனை அடி உயரம் கொண்டது?

**அன்பு நிறை வாசகர்களே!**

இந்த மாத "சுடர் வாசகர் போட்டி" பதில்களை ஜூன் 20ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று பங்கேற்பாளர்களுக்கு சிறப்பு பரிசுகள் வழங்கப்படும். (சரியான முகவரியை குறிப்பிடவும்)

# ஜூன் மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | வி | புனித ஜஸ்டின் மறைசாட்சி | தி.ப. 22:30,23:6-11 | யோவா 17: 20-26 |
| 2 | வெ | புனித மார்சலின், புனித பீட்டர் | தி.ப. 25:13-21 | யோவா 21:15-19 |
| 3 | ச | புனித சார்லஸ் லுவாங்கா | தி.ப. 28:16-20.30-31 | யோவா 21:20-25 |
| 4 | ஞா | தூய ஆவி பெருவிழா | I. தி.ப. 2: 1-11<br>II. 1கொரி 12:3ஆ-7.12-13 | யோவா 20:19-23 |
| 5 | தி | புனித போனிபாஸ் | தோபி. 1:1அ,2-3ஆ,2:1இ-8 | மாற்கு12:1-12 |
| 6 | செ | | தோபி. 2:9-14 | மாற்கு 12:13-17 |
| 7 | பு | | தோபி 3:1-11,16-17 | மாற்கு 12:18-27 |
| 8 | வி | அருளாளர் மரிய தெரேசா சிரமல் | தோபி 6:10,7:1,9-14,8:4-8 | மாற்கு 12:28ஆ-34 |
| 9 | வெ | புனித எப்ரேம் திருத்தொண்டர் | தோபி 11: 5-17 | மாற்கு 12:35-37 |
| 10 | ச | புனித மரியன்னை நினைவு | தோபி 12:1,5-15,20 | மாற்கு 12:38-44 |
| 11 | ஞா | மூவொரு கடவுள் பெருவிழா | I. வி.ப.34:4ஆ-6,8-9<br>II. 2கொரி 13:11-13 | யோவா 3:16-18 |
| 12 | தி | | 2கொரி 1: 1-7 | மத் 5: 1-12 |
| 13 | செ | புனித பதுவை அந்தோணியார் | 2கொரி 1:8-22 | மத் 5: 13-16 |
| 14 | பு | | 2கொரி 3:4-11 | மத் 5:17-19 |
| 15 | வி | | 2கொரி 3:15-4:1,3-6 | மத் 5:20-26 |
| 16 | வெ | | 2கொரி 4:7-15 | மத் 5: 27-32 |
| 17 | ச | | 2கொரி 5:14-21 | மத் 5: 33-37 |
| 18 | ஞா | கிறிஸ்துவின் திருஉடல் திரு இரத்தம் | I. இ.ச.8:2-3.14ஆ-16அ<br>II. 1கொரி 10:16-17 | யோவா 6: 51-58 |
| 19 | தி | புனித ரோமுவால்டு அதீனத் தலைவர் | 2கொரி 6: 1-10 | மத் 5: 38-42 |
| 20 | செ | | 2கொரி 8: 1-9 | மத் 5: 43-48 |
| 21 | பு | புனித அலோசியஸ் கொன்சாகா | 2கொரி 9: 6-11 | மத் 6:1-6,16-18 |
| 22 | வி | புனித பவுலின் நோலா, புனித தாமஸ் மூர், புனித ஜான் பிசர் | 2கொரி 11: 1-11 | மத் 6:7-15 |
| 23 | வெ | இயேசுவின் திரு இருதயம் | I. இ.ச. 7: 6-11<br>II. 1யோவா 4:7-16 | மத் 11:25-30 |
| 24 | ச | திருமுழுக்கு யோவானின் பிறப்பு | I. எசா 49: 1-6<br>II. தி.ப. 13: 22-26 | லூக் 1:57-66,80 |
| 25 | ஞா | ஆண்டின் பொதுக்காலம் 12ம் ஞாயிறு | I. எரே 20:10-13<br>II. உரோ 5:12-15 | மத் 10:26-33 |
| 26 | தி | | தொ.நூ.12:1-9 | மத் 7:1-5 |
| 27 | செ | புனித அலெக்சாந்திரியா நகர் புனித சிரில் | தொ.நூ. 13:2.5-18 | மத் 7:6,12-14 |
| 28 | பு | புனித இரனேயூஸ் | தொ.நூ.15:1-12.17-18 | மத் 7:15-20 |
| 29 | வி | புனிதர்கள் பேதுரு-பவுல் | தி.ப. 12:1-11 | மத் 16:13-19 |
| 30 | வெ | உரோமை திருச்சபையின் முதல் புனிதர்கள் | தொ.நூ.17:1,9-10,15-22 | மத் 8:1-4 |